
ஆப்பிரிக்க நாடுகள் வரிசை 9

# வடமேற்கு ஆப்பிரிக்கா



'சோமலெ'

ஆப்பிரிக்க நாடுகள் வரிசை—9

# வடமேற்கு ஆப்பிரிக்கா

'சோமலே'

பாரி நிலையம்
59. பிராட்வே • சென்னை-1.

முதற் பதிப்பு : ஜனவரி, 1969.

உரிமை ஆசிரியர்க்கு

விலை ரூ. 1-00

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14,

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வடமேற்கு ஆப்பிரிக்கா | .... | 5 |
| மொராக்கோ | .... | 12 |
| அல்ஜீரியா | .... | 31 |
| டுனீசியா | .... | 41 |
| லிபியா | .... | 47 |
| மாரிடேனியா | .... | 61 |

# வடமேற்கு ஆப்பிரிக்கா

ஆப்பிரிக்காவின் வடபகுதி, மக்கள் நெருக்கமும் வரலாற்றுச் சிறப்பும் உலகின் பொருளாதார வாழ்வில் முக்கியத்துவமும் உடையது.

இங்குள்ள நாடுகளில் எகிப்தும், சூடானும் வடகிழக்கில் அமைந்துள்ளன.

எகிப்துக்கும் சூடானுக்கும் மேற்கே ஐந்து நாடுகள் உள்ளன.

1. மொராக்கோ
2. அல்ஜீரியா
3. டுனீசியா
4. லிபியா
5. மாரிட்டேனியா

இந்த ஐந்து நாடுகளும் மத்தியதரைக் கடலோரமாகவோ அதையடுத்தோ உள்ளன.

**மக்ரிப்**

இங்கு வாழும் மக்களுக்கு பெர்பர் என்று பெயர். பெர்பர் என்ற சொல் மேற்கத்தியர் என்று பொருள் படும். இந்த நாடுகள் மெக்காவுக்கு மேற்கே இருப்ப தால் இப்பெயர் ஏற்பட்டது. இவையாவும் பெரும்

பாலும் பிரெஞ்சு ஆட்சியிலிருந்தவை. இந்த நாடு களைக் குறிப்பிட மக்ரிப் என்ற பொதுப் பெயர் வழங்கி வருகிறது.

வரலாற்றை ஊன்றிக் கவனித்தால் இந்த நாடு களுக்குப் பொதுவான சில இயல்புகள் தெரிகின்றன. அவற்றை இங்கே குறிப்பிடுவோம்.

இந்த நாடுகள் மத்தியதரைக் கடலுக்கும் சஹாராப் பாலைவனத்துக்கும் இடையே அமைந்து ஒரு தீவுக் கூட்டம்போலத் தோற்றம் தருகின்றன. வட கோடியில் கடற்கரை தென்கோடியில் பாலைவனம். இடையே உப்பங்கழிகளும் மலைகளும்—இவையே இந்த நாடுகளின் இயற்கை எல்லைகள்.

மக்ரிப் நாட்டு மக்களாகிய பெர்பர், இயேசு பிறப்பதற்கு 15 நூற்றுண்டுகள் முன்னரே இங்கு வாழ்ந்திருக்கிறுர்கள். கி. மு. 9-ஆம் நூற்றுண்டில் பொனீசியர்கள் பெர்பர்மீது படையெடுத்தனர். அதன் பிறகு பொனீசியர் கார்த்தேஜ் என்னும் பெரு நகரை உண்டாக்கினர்.

கார்த்தேஜ், சுதந்திரமான பல அரசாங்கங்களின் தலைநகராக நெடுங்காலம் புகழ்பெற்றது. இந்த நகரம் கடல் வாணிகத்துறையில் பல நூற்றுண்டுகள் பெருஞ் சிறப்புடன் விளங்கிற்று. ஐரோப்பிய நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இந்தப் பட்டினத்தின் வாயிலாகத்தான் தொடர்பு ஏற்பட்டது. வட ஆப்பிரிக்காவில் கார்த்தேஜ்தான் அன்றையப் பெரு நகரமாகத் திகழ்ந்தது. கி. மு. 146-ஆம் ஆண்டில் கார்த்தேஜ் அரசை ரோமாபுரி மன்னர்கள் தோற்கடித்தனர். இதன் பின்னரே ரோமாபுரி அரசு செல்வாக்குப் பெற்றது.

ரோமாபுரி அரசு ஏற்படும் முன்னர் கிரேக்கர்கள் இங்கே குடியேறி, சிரேனே என்ற நகரைத் தோற்றுவித்தனர். மக்ரிப்பில் தோண்டி எடுக்கப்பெற்றுள்ள பொருள்களையும் நாணயங்களையும் கொண்டே பண்டைய கிரேக்க, ரோமாபுரி நாடுகளின் வரலாறு நிலைநாட்டப் பெற்றிருக்கிறது.

**இயேசுவிற்குப்பின்**

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் வண்டல் இனத்தவரும் அவர்களுக்குப் பின்னர் பைஜாண்டியரும் மக்ரிப்பைப் படையெடுத்தார்கள்.

ஏழாம் நூற்றாண்டுக்குப்பிறகு அராபியர் இப்பகுதியில் கருத்துச் செலுத்தத் தொடங்கினர். 10-ஆம் நூற்றாண்டில் இங்கே அராபியர் குடியேறினார்கள். இதையடுத்துப் படிப்படியாக அராபியர் செல்வாக்குப் பெருகிற்று.

10-ஆம் நூற்றாண்டில் எகிப்தில் ஓர் அரச வம்சம் நிறுவப்பட்டது. இந்த வம்சத்தின் பெயர் பாடிமைட் காலிபேட் என்பது. இவர்கள் நபிகள் நாயகத்தின் மகள் பாடிமாவின் வழித்தோன்றல்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டார்கள்.

இவர்கள் வட ஆப்பிரிக்கா முழுவதையும் அடக்கி ஆண்டனர். செங்கடல் முதல் அட்லாண்டிக் பெருங்கடல்வரை பரவிக்கிடந்த எல்லா நாடுகளையும் கைப்பற்றிக் கொண்டார்கள். எங்கும் எவரிடமும் முகமது நபியின் சமயக் கொள்கைகளைப் பரப்புவதில் இவர்கள் வெற்றி கண்டார்கள்.

இஸ்லாமிய சமயத்தைப் பரப்பியவர்களுள் ஒக்பா இபின் நாபி என்பவர் ஒருவர். இவர் பத்

தாயிரம் குதிரை வீரருடன் மெதினுவிலிருந்து வட ஆப்பிரிக்கா எங்கும் சென்று அட்லாண்டிக் கடலோரத்தை அடைந்தாராம். தம் குதிரையைக் கடலுக்குள் விரட்டினுராம். பிறகு,

> அல்லாவே எங்கெங்கெல்லாம் இஸ்லாமிய மதத்தைப் பரப்ப முடியுமோ பரப்பிவிட்டேன். இனி பரப்ப இடமில்லேயே. கடற்கரையையே அடைந்துவிட்டேன். இதற்கு நீயே சாட்சி.

என்று கூறினுராம்.

## 11ஆம் நூற்ருண்டு

*11-ஆம் நூற்ருண்டில் ஐரோப்பாவின் தென் பகுதிகளிலுள்ள சில நாடுகளில் இஸ்லாம் பரவிற்று. இதன் விளேவாக மத்தியதரைக்கடல் இஸ்லாமியரின் கடலாகக் காட்சியளித்தது. 15-ஆம் நூற்ருண்டில் ஸ்பெயினில் இஸ்லாமிய சமயம் வலுவிழந்தது. அல்ஜீரியாவிலும் டுனீசியாவிலும் சில துறைமுகங்கள் ஸ்பெயின் வயப்பட்டன. மொராக்கோவில் போர்த்துக்கல் நாட்டின் செல்வாக்குப் பெருகிற்று. ஐரோப்பாவுக்கும் வட ஆப்பிரிக்காவிக்குமிடையே வாணிகம் விரிந்தது.*

*1518 முதல் 1830 வரை வட ஆப்பிரிக்காவில் துருக்கியின் செல்வாக்கு மிகுந்தது. திருட்டுக்கள் பெருகின. ஆட்சியின் தரம் குறைந்தது.*

## பிரெஞ்சுத் தொடர்பு

*18-ஆம் நூற்ருண்டில் பிரெஞ்சு வணிகர் மக்ரிப் துறைமுகங்களுக்கு வந்தனர். வணிகத் தொடர்பால் பொருள்களே விற்பவரும் வாங்குபவருமாகப் பிரெஞ்சுக்காரரும் மக்ரிப் நாட்டவரும் இருந்தனர். இந்த*

உறவு ஆளுபவராகவும் ஆளப்பட்டவராகவும் மாறிற்று.

*1850* அளவில் வடமேற்கு ஆப்பிரிக்கா பிரெஞ்சுக் குடியேற்ற நாடாயிற்று. பிரெஞ்சுக்காரர், நூருயிரக் கணக்கில் இந்த நாடுகளின் கரையோரப் பகுதிகளில் குடியேறினர்: பருவநிலையும் அவர்களுக்கு ஏற்றதாக இருந்தது. அரசாங்க அலுவல் பார்த்தும் வெளிநாடுகளுடன் வியாபாரம் செய்தும் அவர்கள் வளமாக வாழ்ந்தனர். வாழ்க்கைச் செலவும் பிரான்சைவிடக் குறைவாக இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக ஆட்சி பிரெஞ்சுக்காரரிட மிருந்ததால், பிரெஞ்சுக்காரன் ஒவ்வொருவனும் செல்வாக்குப் பெற்ருன். உள்நாட்டு மக்களால் மதிக்கப்பட்டான்.

நம் நாட்டிலும்கூட இத்தகைய சூழல் நிலவுகிறது. குறிப்பிட்ட ஓரினத்தைச் சேர்ந்தவர் ஓர் இராச்சிய முதலமைச்சராய் இருந்தபோது, அவ்வினத்தவர் மாவட்ட ஆட்சி அலுவலகங்களில் உறவு கொண்டாடினர். அவர்கள் வைத்ததே சட்டமாக இருந்தது.

## இரண்டாம் உலகப்போருக்குப் பின்

*1939*-இல் இரண்டாவது உலகப் போர் தொடங்கிற்று. அதுவரை மேலே குறிப்பிட்ட சில நாடுகளுடன் தான் வட ஆப்பிரிக்காவுக்குத் தொடர்பு இருந்தது. கடற்படை, விமானப்படைத் தளங்கள் இந்த நாடுகளில் ஏற்பட்டதையொட்டி அமெரிக்காவுடனும் வெளி உலகத்துடனும் வட ஆப்பிரிக்கர் தொடர்பு கொள்ளலாயினர். புதியதொரு கண்ணேட்டம் ஏற்பட்டது.

மக்கள் தொகையும் பெருகிற்று. கல்வியின் தேவையை மக்கள் உணர்ந்தனர். ஐரோப்பியர்க்கே

உரியன என்று கருதப்பட்ட சுகாதார வசதிகள் எல்லா மக்களுக்கும் தேவை என்ற கருத்துப் பரவிற்று. நாட்டு உணர்ச்சியும் பெருகியது.

பொருளாதாரத் துறையிலும் வளர்ச்சி உண்டாயிற்று. 'நம் நாட்டு வணிகத்தாலும் மூலப்பொருள்களாலும் நாமே பயனடைய வேண்டும்' என்ற எண்ணம் ஏற்றம்பெற்றது. இரண்டாம் உலகப் போரால் பிரான்சுக்குப் பல இன்னல்கள் உண்டாயின. 1945-இல் அரபுலீக் அமைக்கப்பட்டது. சிரியா, லெபனுன், லிபியா போன்ற நாடுகளின் எழுச்சி, அரபுத் தலைவர்களின் விடுதலை ஆகியவற்ருல் சுதந்திரச் சுடர் கொழுந்துவிட்டு எரியலாயிற்று.

வட ஆப்பிரிக்காவில் குடியேறி, வசதியாக வாழ்ந்துவந்த பிரெஞ்சுக்காரர் தங்களுடைய தனிச் சலுகைகளும் உரிமைகளும் பறிபோகக்கூடுமே என்று ஏங்கினர். அந்த ஏக்கத்தால், அரசியல் சீர்திருத்தங்களுக்கு முட்டுக்கட்டை போட முனைந்தனர். பிரெஞ்சு ஆட்சியின்மீது ஒருபுறமும் குடியேறிய பிரெஞ்சுக்காரர்மீது மற்ருெருபுறமாக ஆப்பிரிக்க மக்கள் இருமுனைப் போராட்டம் தொடங்கினர்.

எகிப்தின் தலைநகராய கெய்ரோவில், பிரெஞ்சு வட ஆப்பிரிக்க நாடுகளிலுள்ள தேசியத் தலைவர்கள் 1954-இல் ஒருங்கு கூடினர். விடுதலைக் குழு ஒன்றை நிறுவினர். இந்த நாடுகளின் விடுதலைக்குப் பாடுபடவும், பிரான்சுடன் கொண்டிருந்த உறவுகளைத் துண்டித்துக்கொள்ளவும் வட ஆப்பிரிக்காவின் நலம் கருதிப் பொதுவான செயல்கள் பலவற்றை மேற்கொள்ளவும் இத்தலைவர்கள் உறுதி பூண்டனர்.

இவர்களுடைய இயக்கத்துக்கு உறுதுணையாக இருப்பதென்று பாண்டுங்கில் கூடிய ஆசிய—ஆப்பிரிக்க மாநாடு 1955-இல் முடிவு செய்தது.

இந்த நாடுகள் ஆப்பிரிக்காவிலுள்ள பிற நாடுகளைப்போல எளிதில் சுதந்திரம் அடைந்துவிடவும் இல்லை. உள்நாட்டுக் கலகங்கள், ஓயாத குண்டுவீச்சு, பல்லாயிரவர் உயிர் இழப்பு, ஐக்கிய நாடுகள் குழுவின் ஆய்வு, பரிந்துரை. இத்தகைய நிகழ்ச்சிகளுக்குப் பிறகு தான் இந்த நாடுகள் விடுதலை பெற்றன.

**விடுதலைக்குப்பின்**

விடுதலை பெற்ற பிறகு இந்தியாவும், ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள பல நாடுகளும் எண்ணற்ற சிக்கல்களைத் தீர்க்கவேண்டிய நிலையிலுள்ளன. உள்நாட்டுக் குழப்பம். மக்கட் பெருக்கம். அரசினரின் வரவு செலவில் பற்றுக்குறை. பொருளாதார வளர்ச்சியில் வேகமின்மை.

வடமேற்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கு இத்தகைய இடையூறுகள் இல்லை. சுதந்திரம் பெற்ற அதே காலத்தில் இங்கு எண்ணெய்க் கிணறுகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. பாலைவனங்கள் சோலை வனங்களாகி வருகின்றன.

# மொராக்கோ

நீங்கள் மொராக்கோவுக்குப் போயிருக்கமாட்டீர்கள். ஆனால் மொராக்கோவைப் பார்த்திருப்பீர்கள்.

திரைப்படம் எடுப்பவர்களுக்கு விருப்பமான சில நாடுகளில் மொராக்கோ ஒன்று.

வரலாற்றுக் கதைகளைப் படமாக எடுக்க மொராக்கோ ஏற்ற நாடு. ஐரோப்பாவிலுள்ள மலை ஒன்றைத் திரைப்படத்தில் காட்டவேண்டுமானல் அதைப்போன்ற மலை மொராக்கோவில் இருக்கிறது. மங்கோலியாவின் புல்வெளிகளைப் போன்ற காட்சிகளை வெள்ளித்திரையில் காட்டவும் அந்த நாட்டுக்கு 15,000 மைல் அப்பாலுள்ள மொராக்கோ நாட்டில் வாய்ப்பு உண்டு.

நுண்ணிய கைவினைப் பொருள்களை மென்மையான தோலில் செய்யும் கலை இந்நாட்டில் இணையற்று விளங்குகிறது, பல தலைமுறைகளாக நெசவு செய்து பழக்கப்பட்டவர்கள் கம்பளங்களை உருவாக்குகிறார்கள். செப்பு, உலோகம், இரும்பு ஆகியவற்றில் தங்கள் கலைத்திறத்தையும் கைவன்மையையும்காட்டக் கூடியவர்களும் உள்ளனர்,

கவிஞர்களாலும் கடற்கொள்ளைக்காரர்களாலும் கவினுறு நாடுகளை விழைவாராலும் பாராட்டப்பெற்ற நாடு மொராக்கோ.

பழமையும் புதுமையும் கலந்தது மொராக்கோ. பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் நிலவிய சந்தைகளில் தொலைக்காட்சிப் பெட்டியை இன்று காணலாம்.

13, 14-ஆம் நூற்றுண்டு நிகழ்ச்சிகளை நினைவூட்டும் கோட்டைகளின் அருகே இன்றைய மாபெரும் ஆகாய விமான நிலையங்கள் உள்ளன.

## நகரங்கள்

**காசாபிளான்கா:**

முற்காலத்திய படைவீரர்களையும் இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற கப்பல்களையும் அடுத்தடுத்துக் காணக்கூடிய இடம் காசாபிளான்கா துறைமுகம். ஆங்கிலேயருக்கு பம்பாய் இந்தியாவின் தலைவாயிலாக இருப்பதுபோல காசாபிளான்கா பிரெஞ்சுக்காரருக்கு மொராக்கோவின் தலைவாயிலாக இருக்கிறது. காசாபிளான்கா என்பது போர்த்துக்கீசியர் கொடுத்த பெயர். அதன் பொருள் வெள்ளை மாளிகை. இந்நகரத்து மாடமாளிகைகள் வெண்மை நிறமுடையவை.

அகல்விளக்குகளுடைய சாலைகள். கவர்ச்சியான கடைகள். உள்ளத்தை ஈர்க்கும் உணவுவிடுதிகள். மலர் வகைகள் அனைத்தும் உடைய பூங்காக்கள். வளமாக வாழ என்னென்ன வசதி தேவையோ அத்தனையும் உடைய மாளிகைகள். இவையுடையது காசாபிளான்கா.

திராட்சைத் தோட்டங்களும் வாழைத்தோட்டங்களும் நிறைந்தது மொராக்கோ. மக்களில் பல நூறு

ஓவியர்களும் சிற்பிகளும் உள்ளனர். சிற்றூர்களில் மக்கள் உடுக்கும் உடையிலும் வாழும் வீடுகளிலும் அவர்கள் நடத்தும் கடைகளிலும் பல வண்ணங்கள் இரண்டறக் கலந்து வானவில்லாகத் தோன்றுகிறது.

**மரக்கேஷ்:**

மரக்கேஷ், இந்த நாட்டின் மற்றொரு நகரம். பழமையின் வடிவமான இங்குள்ள பாஹியா அரண்மனை. 19ஆம் நூற்றாண்டில் சுல்தானின் இல்லமாக இருந்தது. பளிங்கு மண்டபங்களும் நீரூற்றுக்களும் உடைய இம்மாளிகை, மூர் கட்டிடக்கலையில் அமைக்கப்பட்டது.

மரக்கேஷில் பெரிய மசூதியும் கோட்டையும் ரோமாபுரி ஆட்சியிலும் அராபியர் ஆட்சியிலும் தொடங்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புடைய கல்வி நிலையங்களும் ஆட்டோமன் அரசர்களின் நினைவுச் சின்னங்களும் உள்ளன.

**பெஜ்:**

பெஜ் என்னும் நகரம் 14ஆம் நூற்றாண்டில் தோன்றியது. முஸ்லிம் பண்பாட்டுக்கு அறிகுறியாக விளங்கும் நகரங்கள் என்று உலகெங்கும் குறிப்பிடத் தக்கவற்றுள் இந்நகரம் ஒன்று. இஸ்லாமியக் கல்வியின் இருப்பிடமாக இருப்பது இந்நகரத்தின் சிறப்பு. பள்ளத்தாக்கில் இருந்தாலும் பல்கலைக்கழகத்தால் இந்நகரம் உலக அறிஞர் மதிக்கத்தக்கவாறு உயரத்தில் இருக்கிறது.

**மெக்னேஸ்:**

மெக்னேஸ் என்று ஒரு நகரம் உளது. இது 18ஆம் நூற்றாண்டில் உருவானது. பிரான்சிலுள்ள வெர்சே

அரண்மனைக்குப் போட்டியாக இங்கு ஒரு சுல்தான் ஓர் அரண்மனை அமைத்துள்ளார். இந்த நகரில் தேசிய அரும்பொருட் காட்சிக்கூடம் இருக்கிறது. பெரிய நூல் நிலையங்கள் உள்ளன.

**கலைச் சிறப்பு**

மருத்துவக் கலையில் பெரும்புகழ் பெற்றவர்கள் வாழ்ந்த வீடுகளை மொராக்கோவில் காணலாம். அராபியரின் தத்துவங்களைபற்றி ஆராய்ந்த ஸ்பெயின் நாட்டுப் பேரறிஞர் இல்லங்களும் இங்கே காட்சிப் பொருளாக உள்ளன.

வண்ண ஓவியங்களால் வான்புகழ் பெற்றுள்ள ஓவியர்கள் பலர் இன்றும் வாழும் நாடு மொராக்கோ. மீனாட்சியம்மன் கோயிலில்போல, பழமைக் கலைச் சிறப்பின் சிகரமாக விளங்கிய கோபுரங்களைப் புதிய வண்ணம் தீட்டிக் கலையையும் பார்ப்பவர் கண்களையும் கெடுக்கும் திருப்பணிகளை மொராக்கோவில் ஒருவரும் செய்யவில்லை. அத்தகைய திருக்கூட்டத்தைத் திருப் பணியாளர் என்று போற்றும் அளவுக்கு அங்குக் கலையறிவும் பக்தியின் தன்மையும் குறைந்துவிட வில்லை.

கோபுரக் கலசம்போல மசூதிகளின் அமைப்பில் பொன் நிறத்தில் உருண்டை வடிவங்கள் உள்ளன. அவையே மொராக்கோ நாடெங்கும் வெற்றிலை பாக்குக் கடைகளின் சின்னமாக உள்ளது.

**மூர், சோனகம்**

மொராக்கோ முஸ்லீம்களை 'மூர்' என்று ஆங்கிலத் திலும் சோனகர் என்று தமிழிலும் குறிக்கலாம். இவர்கள் உலகெங்கும் வணிகத் தொடர்புடையவர்கள்.

இலங்கையில் கொழும்பு மாநகரில் புதிய சோனகத் தெருவும் பழைய சோனகத் தெருவும் உள்ளன. சென்னை மாநகரில் இவர்களுடைய வணிகத் தொடர்புக்கும் கட்டிடக்கலைக்கும் எடுத்துக்காட்டாக மூர் அங்காடி (மூர்மார்க்கெட்)யும், மண்ணடிப் பகுதியில் மூர் சந்தும் இருக்கின்றன. மூர் இனத்தவரின் நாகரிகத்துக்கும் கட்டிடக்கலைக்கும் நிலையான காட்சிக் கூடமாய் ரபாட் என்னும் நகரம் அமைந்திருக்கிறது. இதுவே மொராக்கோவின் தலைநகரம். மூர்கள் நிறைந்த நாடு என்பதாலேயே, மொராக்கோ என்ற பெயர் ஏற்பட்டது.

சோனகம் என்ற சொல் மேற்கு ஆசிய நாடுகளின் முஸ்லீம்களையும் அவர்தம் மொழியையும் குறிக்கப் பழந்தமிழரால் பயன்படுத்தப்பட்டது.

**அங்கம் வங்கம் கலிங்கம் கௌசிகம்**
**சிந்து சோனகம் திராவிடம் சிங்களம்......**

என்பது திவாகர நூற்பா.

**ஜிப்ரால்ட்டர்**

ஜிப்ரால்ட்டர் என்னும் குறுகலான நீர்வழி, மொராக்கோ எல்லையில் இருக்கிறது. இது அட்லாண்டிக் பெருங்கடலையும் மத்திய தரைக்கடலையும் இணைக்கிறது. ஸ்பெயினை மொராக்கோவிடமிருந்தும் ஆப்பிரிக்காவை ஐரோப்பாவிடமிருந்தும் பிரிப்பதும் இந்த நீர்வழிதான்.

ஜிப்ரால்ட்டர் என்னும் மலையும் இந்த நாட்டில் இருக்கிறது. உலகத்து மலைகளில் இந்த மலையே உறுதியானது என்பர். இக்காரணத்தால், விடா முயற்சியும் மன உறுதியும் உடையவரை ஜிப்ரால்ட்டர் மலையுடன்

ஒப்பிட்டுச் சொல்வது உலகெங்கும் வழக்கமாக இருக்கிறது.

மொராக்கோவின் சில பகுதிகள் ஸ்பெயின், கிரீஸ், துருக்கி ஆகிய நாடுகளைப்போல இருக்கின்றன.

இக்காரணங்களால் திரைப்படம் எடுப்பவர்கள் மொராக்கோ நாட்டை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர். இரவல் குரல் கொடுக்கும் பாடகிகள் இருப்பது போல இரவல் காட்சி தரும் நாடுகளும் உள்ளன. அவற்றுள் ஒன்று மொராக்கோ.

**அமைப்பு**

மொராக்கோ ஆப்பிரிக்காவின் வடமேற்கு மூலையில் இருக்கிறது. மேற்கே அட்லாண்டிக் கடலும் வடக்கே மத்திய தரைக் கடலும் கிழக்கிலும் தெற்கிலும் அல்ஜீரியாவும் உள்ளன.

இங்கு சூரிய வெப்பம் மிகுதி. கடற் காற்று வீசுவதால் குளிரும் பனியும்கூட மிகுதியாகத்தான் இருக்கின்றன. அட்லாஸ் என்ற மலைத் தொடர்கள் இங்குள்ளன. இவை உலகத்திலுள்ள ஏனைய மலைகளைப் போலல்லாது இரு பக்கங்களிலும் பாறைகளையுடைய மண்மலையுடையது. 13,000 அடி உயரமுள்ள மலைகளும் உள்ளன. இவற்றில் எரிமலைகளும் உண்டு.

**மக்கள் தொகை:** இந்த நாட்டின் மக்கள் தொகை ஒரு கோடி முப்பது லட்சம்.

**பரப்பு:** 1,71,305 சதுரமைல். இது தமிழ்நாட்டைப் போல மூன்றேகால் பங்கு.

**நகரங்கள்:** மிகப் பெரிய நகரம் காசாபிளான்கா. மக்கள் 11 லட்சம். ஏனைய நகரங்கள் மரக்கேஷ், மூன்று லட்சம். தலைநகரம் ரபாட், இரண்டரை லட்சம். பெஜ்

இரண்டரை லட்சம். சிறு நகரங்கள் மெக்னேஸ், டான் ஜியர், ஹெனஜாட. ஸ்பானிஷ் ஆட்சியில் புகழ்பெற்ற டெட்டுவான்.

**மொழி:** இந்த நாட்டு மக்களில் பாதிப்பேர் பெர்பர் மொழியையும் இன்னொரு பாதிப்பேர் அரபு மொழியையும் பேசுகிறார்கள்.

பள்ளிக்கூடங்களில் முதல் இரண்டு வகுப்புக்களில் அரபு மொழியே கற்பிக்கப்படுகிறது. பிறகு பிரெஞ்சு மொழியும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

பேச்சு மொழியில் அரபு மொழி, பகுதிக்குப் பகுதி வேறுபடுகிறது. நாமும் சில அரபுச் சொற்களைக் கேட்டு வைப்போமே.

ஹுவார்—இளவயதான ஒட்டகத்தின் இறைச்சி.

ஜபாலி—வாடைக் காற்று.

ஹல்லியா—ஒரு வகைப் பணியாரம்.

மசாக்கிரியா—பெண்களுக்கு மிதியடி செய்யும் சக்கிலியர்களின் குழு.

ஜீஜா—ஏர்.

அஜரியா—கணவனிடமிருந்து மணவிலக்குப் பெற்று விரும்பியவருடன் உறவாடி வாழ்பவர்.

லாடாலக்கேட்வா லாடண்டா கேன் — அதை நம்பவும் வேண்டாம் குறை கூறவும் வேண்டாம்.

**நாணயங்கள்:** பிரெஞ்சு ஸ்பானிஷ் நாணயங்கள் இரண்டுமே புழக்கத்திலிருக்கின்றன.

**மொராக்கோ மக்களின் ஆசை:** அன்பு மனைவிக்காக அரசன் அமைத்த தாஜ்மகாலைக் காணவேண்டுமென்பது.

**மொராக்கோவில் காணத் தக்கவை:** மன்னர்கள் வாழ்ந்த மாளிகைகள், அத்திமரங்கள், அலுமினியத்தால் செய்த மேஜை நாற்காலிகள், ஓவியக் காட்சிக் கூடங்கள்.

**ஆட்சிப் பிரிவுகள்**

20-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் இந்த நாடு மூன்று பகுதிகளாக ஆளப்பெற்று வந்தது. அவை யாவன;

**பிரெஞ்சு மொராக்கோ,**
**ஸ்பானிஷ் மொராக்கோ,**
**டான்ஜியர் மொராக்கோ.**

இவற்றுள் பிரெஞ்சு மொராக்கோதான் பெரிய பகுதி. வளமான பகுதியும் ஆகும். பிற இரண்டும் சிறு பகுதிகள். அவற்றைப் பற்றி சுருக்கமாக பின்னர் கூறுவோம்.

**வெளிநாட்டார்**

மொராக்கோவில் அயல் நாட்டினராகப் பிரெஞ்சுக்காரர் 170 ஆயிரம் பேர் இருக்கின்றனர். இவர்கள் செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்தனர். தொழிற்சாலைகளிலும் தோட்டப் பண்ணைகளிலும் இவர்கள் முதலீடு செய்திருக்கின்றனர். மொராக்கோ சுதந்திரம் அடைந்த பிறகு இவர்களுடைய செல்வாக்குக் குறைந்தாலும் செல்வம் குறையவில்லை.

1950-இல் யூதர் ஒருலட்சத்து அறுபதாயிரம் பேர் இருந்தனர். கூரிய அறிவு, மனஉறுதி, கட்டுப்பாடு, உழைப்பு, உலகெங்கும் தொடர்பு, தங்களுடைய பழமையிலும்பெருமையிலும் அசையாத நம்பிக்கை, சனிக்கிழமையைப் புனித நாளாகக் கொள்ளுவது,

செலவில் சிக்கனம்—இந்த இயல்புகளின் தொகுப்பே யூத சமுதாயம். மொராக்கோ நாட்டு யூதர்கள் முதலில் தங்களை யூதர்களாகவும் தங்களைமொராக்கோ நாட்டவராகவும் கருதினர். இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் வாய்ச் சண்டையும் கைச் சண்டையும் ஏற்பட்டபோது தங்களுடைய கருத்தைத் தெரிவிக்காமலிருக்க இவர்களால் இயலவில்லை. இஸ்ரேல் நாட்டின் மீது முஸ்லீம் நாடுகளில் பகையுணர்ச்சி ஏற்பட்டபோது மொராக்கோ யூதர் பாதிக்கப்பட்டனர். பல தலைமுறைகளாக அவர்கள் பாடுபட்டு நிறுவிய பொருளாதார அமைப்புக்களைக் கைவிட்டு ஒரு லட்சம் யூதர் பிரான்சுக்குச் சென்றனர். அவர்களுள் சிலர் அங்கிருந்து இஸ்ரேலை அடைந்தனர்.

**மக்கள்**

இந்த நாட்டு மக்கள் பாதிரிமார் உருத்துவது போன்ற உடையை உடுத்தி, தலையில் குல்லா வைத்துக் கொள்கின்றனர். இவர்கள் பயன்படுத்தும் துணியும் உடையின் வடிவமும் பாலைவனத்து மண் தூசிகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் குளிர்காலத்தில் உடலைச் சூடாக்கிக் கொள்ளவும் வேனிற் காலத்தில் உடலைக் குளுமையாக்கிக் கொள்ளவும் பயன்படுகிறது. இந்த கௌன் வேட்டியாகவும் சட்டையாகவும் கோட்டாகவும் உதவுகிறது.

பெண்களின் உடை உடல் முழுவதையும் மூடிய நிலையிலிருக்கும். எளிதில் அகற்ற இயலாதவாறு அமைந்திருக்கும்.

குடி வகைகளை இந்த நாட்டு மக்கள் மிக அரிதாகவே பயன்படுத்துகிறார்கள்.

இந்த நாட்டில் இரகசிய நோய்கள் மிகுதி. கட்டுப்பாடு ஏற்பட்டால் கள்ளச் சந்தை பெருகும். முகத்திரை போட்டுப் பெண்களுக்குப் பலவகையான தடைகள் இருப்பதால் காதல் களவு வழி நிகழ்கிறது. காதல் ஏக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளாமல் இறந்து போகிறவர்கள் பலர். வயிற்றுப் பசியின் கொடுமையால் இறப்பவர்களைவிட காமப்பசியால் இறப்பவர் தொகைதான் கூடுதலாக இருக்கிறது.

மொராக்கோவிலுள்ள ஒவ்வொரு உள்நாட்டுத் தலைவனும் நடனமாடும் பெண்கள் படை ஒன்றை வைத்துக் கொள்வான். அவர்களின் காற்சிலம்பு ஒரு முறை ஆற்றில் தவறிவிட்டதாம். பொன்னால் ஆன இந்த ஆபரணத்தை மீண்டும் செய்ய, உள்நாட்டுத் தலைவன் புது வரி விதித்தானாம். மக்கள் அதை மன முவந்து செலுத்தினார்களாம்.

ஆடவர், பெண்டிர் உறவு பற்றிய வழக்குகள் மொராக்கோ நீதிமன்றங்களில் ஏராளமாய் நடைபெறுகின்றன. பிரான்சில் படிக்கும் மாணவர்கள் அரசியல் கருத்துக்களில் வெவ்வேறு கட்சிகளை ஆதரிப்பார்கள். ஆனால் சுவை உணவுக்கும் மனத்திற்கேற்ற இன்ப விளையாட்டுகளுக்கும் மொராக்கோ தான் ஏற்ற பிரெஞ்சுக் குடியேற்ற நாடு என்பதைப் பற்றி அவர்களிடையே கருத்து வேறுபாடு சிறிதளவும் கிடையாது.

போர்க் காலத்தில் படைகள் இந்த நாட்டிற்கு வந்தபோது காதல் விளையாட்டு உச்சநிலை எய்திற்று, பெண்களுக்கும் அப்போதுதான் துணிவு ஏற்பட்டது. துணிவு இருந்தால்தான் எண்ணம் செயல்படும், வாழ்வில் வெற்றி கிட்டும் என்றும் உணர்ந்தனர்.

ஒவ்வொரு பகுதியிலும் சிவப்பு விளக்குப் பகுதி ஒன்று உண்டு. பரப்பில் சிறியது. ஆனால் இங்கே தான் பெண்கள் நெருக்கம் மிகுதி. சில நகரங்களில் முஸ்லீம்களுக்கென்று முஸ்லீம் பெண்களும் வெளிநாட்டவர்க்கென்று யூதர் பெண்களும் தனித் தனிப் பகுதிகளில் அரசினரால் வைக்கப்பட்டிருக்கின்றனர். சில குறிப்பிட்ட நாட்கள் தூதர்கள் வந்து போவதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

ஆடவர் பெண்டிர் சேர்க்கை வெறும் உடலுறவாகக் கருதப்படுவதில்லை. உடலுறவுடன் சேர்த்து நடனத்தையும் இசையையும் குடித்துக் கூத்தாடுவதையும் மொராக்கோ நாட்டரசினர் விரும்புகின்றனர். சத்துணவு சாப்பிட்டு உணர்ச்சியின் எல்லையில் மக்கள் வாழ்கிறார்கள், ஆகையால் இவர்களுடைய உணர்ச்சி வெளிப்பட இத்தகைய வாய்ப்புக்கள் இருக்க வேண்டும். இதனால் நாட்டை ஆளுவது அரசினருக்கு எளிது.

இராணுவத்தின் நலங் கருதியும் இந்த வழக்கங்களுக்கு அரசினர் ஆதரவு காட்டி வருகிறார்கள். காசாபிளான்கா நகரத்தில் பதிவு செய்யப் பெற்ற தாசிகளின் எண்ணிக்கை 11 ஆயிரம். இவர்களில் எல்லா நாட்டினரும் இருக்கின்றனர். ஆப்பிரிக்காவில் இதுதான் ஐந்தாவது பெரிய நகரம்.

பல்வேறு இனத்தவருடைய காதல் களியாட்டங்கள் நடந்தபோதிலும் கலப்புத் திருமணம் நிகழவில்லை கலப்பு இனம் உருவாகவும் இல்லை. மேலைநாட்டு நாகரிகத்தால் உடல் தெரிகிற உடைகளை அணிந்து பெண்கள் கடற்கரைகளில் சுற்றுவதும் ஆடைகளின் அளவைக் குறைத்துக் கொள்வதும் ஆடவருக்குச்

சமமாக சுதந்திரம் கேட்பதும் பரவிவிட்டன. இக் காரணங்களாலேயே ஐரோப்பியர் மீது மொராக்கோ ஆடவர்க்கு வெறுப்புணர்ச்சி ஏற்பட்டது.

## வேளாண்மை

வேளாண்மையே இந்த நாட்டின் பெரிய தொழில். மக்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் வேளாண்மை யில் ஈடுபட்டிருக்கின்றனர்.

கோதுமையும் நவதானியங்களும் பயிரிடப் படுகின்றன. ஆலிவ் மரம் பயிரிடுவது பெரிய தோட் டத் தொழிலாக வளர்ந்திருக்கிறது.

பிற விளைபொருள்கள் பேரீச்சம் பழம், பருத்தி, சிட்ரஸ்பழம், வாதாங்கொட்டை, பட்டாணி வகைகள் சோளம், பார்லி, லின்சீடு எண்ணெய்.

கால்நடை வளர்த்தல் பெரிய அளவில் நடைபெறு கிறது. இதையொட்டியே கம்பளநெசவுத் தொழிலும் பலவகைத் தோலால் மென்மையான பொருள்களைச் செய்யும் கலைகளும் வளர்ந்திருக்கின்றன.

மீன் பிடித்தல் இந்த நாட்டின் சிறப்பான தொழில். சார்டின் என்னும் ஒருவகை மீன், தகரங் களில் அடைத்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. மீனை இந்த நாட்டில் கடல் வாழைக்காய் என்றுதான் சொல் கிறார்கள். முயல் இறைச்சிகூட சைவ உணவாகத்தான் கருதப்படுகிறது. முயல் இறைச்சிக்குத் துணை உணவாக ஆலிவ் பழத்தையும் உட்கொள்வர்.

இந்த நாட்டில் மூன்றில் ஒரு பகுதியில் ஆலிவ் மரங்கள் உள்ளன. இந்த மரத்தில் உண்டாகும் ஆலிவ் பழங்களைச் சாப்பிடலாம். பழுப்பதற்குமுன் பிடுங்கி அந்தக் காயைக் காய்ச்சி எண்ணெய் எடுக்கலாம்.

சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப் பழக்கம், எண்ணெய்யும் உடற்பழக்கம். தமிழ் நாட்டில் நல்லெண்ணெய், கடலை எண்ணெய் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பழகியிருக்கிறோம். மலையாளிகள் தலைக்குத் தேய்ப்பது முதல் சமையல் செய்வதுவரை எல்லாவற்றிற்கும் தேங்காய் எண்ணெய்யைப் பாவிக்கிறார்கள். வங்காளத்திலும் பஞ்சாப்பிலும் இவ்வாறு உதவுவது கடுகு எண்ணெய். மொராக்கோ நாட்டவரின் வாழ்க்கை ஆலிவ் எண்ணெய்யுடன் இரண்டறக் கலந்திருக்கிறது. அவர்கள் உடம்பில் ஆலிவ் எண்ணெய்யைத் தேய்த்துக் கொள்ளுகிறார்கள். ஆலிவ் எண்ணெய்யிலேயே சமையல் செய்துகொள்கிறார்கள். இதனால் அவர்களுடைய உடல் கொழுகொழு என்று இருக்கிறது. ஒவ்வொருவரும் சித்தானைக் குட்டிபோல் இருக்கிறார்கள்.

உடற்கட்டில்லாத இந்தியர் யாரையாவது பார்த்தால், "பாவம்! ஆலிவ் எண்ணெய்யைப் பயன்படுத்த இவனுக்குக் கொடுத்து வைக்கவில்லை" என்று சொல்லி இரக்கப்படுவார்கள்.

உடலில் எண்ணெய் தேய்த்துக்கொள்ளக்கூடாதென்ற தமிழ்வாணன்—ஈ. வே. ரா. இயக்கம் ஆப்பிரிக்காவுக்குப் பரவவில்லை.

**தொழில்கள்**

இந்நாட்டின் முக்கியமான தொழில்கள் திராட்சையிலிருந்து மது தயாரித்தல், பருத்தி ஆடைகளும் கம்பள ஆடைகளும் செய்தல் முதலியன. சிமிண்டு, உலோகப் பொருள்கள், தோல் பொருள்கள் ஆகியவையும் செய்யப்படுகின்றன.

பெட்ரோலியத் தொழில் சிறிதளவு உள்ளது. காசாபிளான்காவில் பெரியதொரு இரசாயனத் தொழிற்சாலை தொடங்கப்பட்டிருக்கிறது. எஃகு ஆலை அமைக்க ஏற்பாடு நடைபெறுகிறது.

**புவியியல் வளம்**

இந்த நாட்டின் பெரிய புவியியல் பொருள் பாஸ்பேட்டு.

நிலக்கரி, கோபால்டு, மங்கனீசு, மாலிப்டெனன், இரும்புத் தாது, ஈயம், துத்தநாகம் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**போக்கு வரத்து**

ஆகாயவிமானப் போக்கு வரத்து இந்த நாட்டில் பெருமுன்னேற்றம் அடைந்திருக்கிறது.

வானொலி நிலையங்களும் தொலைக் காட்சி நிலையங்களும் ஐரோப்பிய நாடுகளுடன் போட்டியிடும் நிலையில் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இவை தனியாரால் தொடங்கப்பட்டவை. இவற்றை இப்போது அரசினர் நடத்திவருகின்றனர்.

**இயற்கை நிலை**

இயற்கை நிலையால் மொராக்கோ மூன்று பகுதிகளாக உள்ளது. 1. மத்தியதரைக் கடலோரத்திலுள்ள செழிப்பான பகுதி. 2. அட்லாஸ் மலைகளுக்கிடையே யுள்ள வளம் சார்ந்த பள்ளத்தாக்குப் பகுதிகள். 3. சஹாராவுக்கு அருகே உள்ள பாலைவனப் பகுதி.

அக்டோபர், நவம்பர், ஏப்ரல், மே மாதங்கள் மழைக்காலம். வடமேற்குப் பகுதியில் மிகுதியான மழை பெய்கிறது.

**பல்சுவை**

இந்த நாட்டில் வேடிக்கையான பல பழக்கங்கள் நிலவுகின்றன. அடுப்பில் தீமூட்ட கழுதைவிட்டை யைப் பயன்படுத்துகிருர்கள்.

சைக்கிள் வாங்குவதுபோல மனைவியை விலைக்கு வாங்கலாம். திருமணத்தன்று மணமக்கள் இருவரும் மொட்டை அடித்துக் கொள்ளுகிருர்கள்.

மனைவி சிரித்தால் அவளுடைய நடத்தை தவறு என்று பொருள். சிரித்ததைக் காரணமாகக் காட்டி மனைவியை விலக்கி வைக்கலாம். மனைவியை விலக் காமலும் புதிய மனைவியை மணந்துகொள்ளலாம். பெண்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. தேர்தலில் வாக்களிக்கும் உரிமை 1967-இல்தான் கொடுக்கப் பட்டிருக்கிறது.

பல மனைவியரை மணந்துகொள்ள கணவனுக்கு உரிமை உண்டு. மனைவியரிடையே ஏற்படும் பூசல்கள் ஏராளம். ஒவ்வொருத்திக்கும் தனி வீடு கட்டிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே பணக்காரர் மட்டுமே பல மனைவியரை மணந்துகொள்கின்றனர். மனைவியர் பலர் இருந்தபோதிலும், கணவன்—மனைவி ஊடலுக்குக் குறைவில்லை.

இந்த நாட்டின் மதம் இஸ்லாமிய மதம். இஸ்லா மியக் குடியரசாக இந்த நாடு நடைபெற்று வருகிறது. சில துறைகளில் பிரெஞ்சுச் சட்டம் அமலில் இருக்கிறது. அரசியல் சட்டம் இஸ்லாமிய சமயக் கொள்கைகளுக்கே ஏற்றம் தருகிறது.

நடைமுறைப் பழக்கம் பிரெஞ்சுச் சட்டம் இரண் டையும் இணைத்து, நீதி மன்றங்கள் தீர்ப்புக் கூறு கின்றன. அரசியல் கட்சிகள் பொருளாதார அடிப்

படையில் அந்தந்த மாநிலத்துக்கேற்ப மாநிலக் கட்சிகளாக மட்டுமே இயங்குகின்றன. வாய்க்கால் வெட்டவும், சாலை போடவும் ஒரு லட்சம் பேர் கொண்ட சீரணிப் படையை அரசினர் பயன்படுத்தி வருகிறார்கள்.

மக்களுடைய விருப்பத்திற்கேற்ப, சுல்தான் இந்த நாட்டின் தலைவராயிருக்கிறார். விடுதலை இயக்கத் தலைவராகவும் இவர் இருந்தார். மொராக்கோ நாட்டில் இஸ்லாமிய சமயத் தலைவராகவும் இவரே விளங்குகிறார். போர்ப்படைத் தலைமைத் தளபதியும் இவரே யாவார். சட்டங்களை நிறைவேற்ற நாடாளு மன்றத்திற்கு உரிமை உண்டு. ஆனால் மன்னராகிய சுல்தான் விரும்பினால்தான் சட்டங்கள் செயல்படும்.

இந்த நாட்டிற்குச் சில பெருமைகள் உண்டு. இந்த நாட்டின் படை ஆப்பிரிக்காவிலேயே குறிப்பிடத்தக்க படைகளுள் ஒன்று.

*1912* ஆம் ஆண்டில் தான் இந்த நாடு முழுவதும் பிரெஞ்சுக்காரருக்கு அடிமைப்பட்டது. அதற்கு முந்தின, *1200* ஆண்டுகளில் நாட்டின் சில பகுதிகள் அயலவருக்கு அடிமைப்பட்டிருந்த போதும் நாடு முழுவதும் ஒரு போதும் சுதந்திரத்தை இழக்கவில்லை. ஆகையால், அயலவர் ஆட்சி காணா நாடு என்ற சிறப்பு மொராக்கோவுக்கு இருந்தது.

அமெரிக்காவின் சுதந்திரத்தை அங்கீகரித்த முதல் நாடு மொராக்கோதான். அமெரிக்க அரசாங்கம் முதல் தடவையாக வெளிநாடுகளில் தூதுவர் அலுவலகம் திறந்தது, மொராக்கோ நாட்டில் தான். Voice of America என்ற வானொலி நிலையத்துக்கு மொராக்கோவில் பெரியதொரு ஒலி பெருக்கி நிலையம் இருக்கிறது.

# வரலாறு

| | |
|---|---|
| *1830* | பிரெஞ்சு ஆட்சி இங்கு ஏற்பட்டது. பிற ஐரோப்பிய நாடுகளுக்கு ஓரளவு செல்வாக்கு இருந்தது. |
| *1912* | ஐரோப்பிய நாடுகள் வட ஆப்பிரிக்காவைத் தங்கள் பாட்டன் சொத்தாகக் கருதி தங்கள் விருப்பம் போல் பங்கு போட்டுக் கொண்டனர். அந்த ஏற்பாட்டின்படி எகிப்து, சூடான் பகுதிகளில் பிரெஞ்சுக்காரர் தங்கள் உரிமைகளைப் பிரிட்டனுக்கும், மொராக்கோவில் பிரிட்டிஷார் தங்கள் உரிமைகளைப் பிரெஞ்சுக்காரருக்கும் விட்டுக் கொடுத்தனர். |
| *1912—1956* | 44 ஆண்டுகள் முறையான பிரெஞ்சு ஆட்சி நடைபெற்றது. போக்குவரத்து கல்வித் துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டது. பிளேக் நோய் ஒழிக்கப்பட்டது. தரிசு நிலங்களிலும் பயிர்த் தொழில் செய்யப்பட்டது. சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம் என்ற கொள்கைகள் மொராக்கோவுக்கு மறுக்கப்பட்டன. |
| *1930* | தேசிய உணர்ச்சி தோன்றிற்று. |
| *1942* | விடுதலை இயக்கம் வேரூன்றிற்று. |
| *1952* | சுல்தான், பதவியிலிருந்து நீக்கப்பட்டார். |

1956 மொராக்கோவின் சுதந்திரத்தை பிரான்சு ஏற்றது. ஐ. நா. மன்றத்தில் சுதந்திர மொராக்கோ ஓர் உறுப்பு நாடாயிற்று.

1958 தரபாயா என்ற மாநிலம் ஸ்பெயின் ஆட்சியிலிருந்து மொராக்கோவுக்கு மாற்றப்பட்டது.

1962 மாரிடேனியா, அல்ஜீரிய ஆகிய நாடுகளுடன் மொராக்கோவின் உறவு சீர் குலைந்தது.

ஸ்பானிஷ் சஹாரா, மாரிடேனியா மாலியின் வடபகுதி அல்ஜீரியா நாட்டின் மேற்குப் பக்கத்திலுள்ள புவியியல் வளம் நிறைந்த பாலைவனங்கள் மத்திய தரைக் கடலிலுள்ள சில தீவுகள் ஆகியவற்றையும் சேர்த்து விரிந்த மொராக்கோ நாடு ஒன்றை உருவாக்க வேண்டுமென்பது இந்நாட்டு மக்களின் கனவு.

**டான்ஜியர்**

இது ஒரு துறைமுக நகரம். இப்போது மொராக்கோவின் ஒரு பகுதியாக இருக்கிறது. பம்பாய்க்கும் டான்ஜியர்க்கும் ஒற்றுமை உண்டு. இரு நகரங்களும் போர்த்துக்கீசியரைச் சேர்ந்திருந்தன. அவர்களுடைய இளவரசி கத்தரையன் ஆப் பிரகன்ஷா என்பவள். அவள் 1662—இல் இரண்டாவது சார்லஸ் என்ற ஆங்கிலேய அரசரைத் திருமணம் செய்துகொண்டாள். பம்பாயும் டான்ஜியரும் அவளுக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்டன.

டான்ஜியர் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து வந்தது. முதல் உலகப் போருக்குப் பிறகு அது சுங்கவரியில்லாத துறைமுகமாகவும் பல நாடுகளின் கூட்டாட்சிக்கு உட்பட்ட பகுதியாயும் ஆயிற்று.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின், பெல்ஜியம், நெதர்லன்ட்ஸ், இத்தாலி, போர்த்துக்கல் ஆகிய நாடுகள் கூட்டாக இந்நகரில் ஆட்சி செலுத்தின டான்ஜியரில் இருந்த அந்த நாடுகளின் தூதர்கள் சேர்ந்து ஆட்சிக்குழுவை அமைத்துக் கொண்டனர். ஆட்சி அலுவலராக மாறி மாறி ஒவ்வொரு நாட்டவரும் பணி புரிந்தனர். போலீஸ் படை பெல்ஜிய நாட்டாரால் நிர்வகிக்கப் பெற்றது. ஆயுதம் தாங்கிய போலீஸ் படையில் ஸ்பானியர்கள் இருந்தார்கள். ஆங்கிலேயருடைய நாணயம் புழக்கத்திலிருந்தது.

இத்தாலியர்கள் நீதிபதிகளாக இருந்தார்கள். அலுவலர்களாகவும் வியாபாரிகளாகவும் 20,000 யூதர்கள் இருந்தனர். டான்ஜியரில் எந்தவிதமான வரியும் விதிக்கப்படவில்லை. உலகத்துப் பணக்காரர் பலர் இங்கு வந்து குடியேறினர். எந்த நாட்டுக்காரரும் வாழவும் குடியுரிமை பெறவும் பாங்கு திறக்கவும் உரிமை இருந்தது. அயல் நாட்டு நாணயங்களில் கள்ளச் சந்தை நடந்தது. வரி ஏய்ப்பவர்கள், கள்ளக்கடத்தல் காரர்கள், ஒற்றர்கள் ஆகியோர் நிறைந்திருந்தார்கள். இதனால் இங்கே பணம் புரண்டது. கேளிக்கை வாழ்வு பெருத்தது.

டான்ஜியர், மொராக்கோவின் ஒரு பகுதியாகி பிறகு பொலிவு இழந்து விட்டது. அதன் தனித் தன்மை மறைந்துவிட்டது. எல்லா நகரங்களைப் போல அதுவும் பத்தோடு பதினொன்றாக ஒரு சாதாரண நகரமாக மாறிவிட்டது.

# அல்ஜீரியா

வட ஆப்பிரிக்காவில் நடு நாயகமாக விளங்கும் நாடு அல்ஜீரியா.

மொராக்கோ அல்ஜீரியாவின் வலது காது போலவும் டுனீசியா அந்த நாட்டின் இடது காது போலவும் அமைந்திருக்கின்றன.

மொராக்கோவைப்போல அல்ஜீரியாவுக்கு நீண்ட சுதந்திர வரலாறு இல்லை. இந்த நாட்டின் கடலோரப் பகுதி நெடுங்காலமாக ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்தில் இருந்திருக்கிறது.

சிதறுண்ட பலபகுதிகளின் ஒன்றியமாக அல்ஜீரியா விளங்குகிறது. சிறுபான்மையான பல இனத்தவர் இங்கு வாழ்கிறார்கள். இந்த இனங்கள் எத்தனை? இவற்றின் தலைவர் எத்தனை பேர்? என்பதை விரைவில் கணக்கெடுத்து விடமுடியாது.

அல்ஜீரியாவில் வாழும் பிரெஞ்சுக்காரர் தொகை 12 லட்சம். பிரெஞ்சுப் பாராளுமன்றத்திலும் அல்ஜீரியாவுக்கு பிரதிநிதித்துவம் இருந்தது. இந்த நாடு என்றென்றும் பிரான்சின் ஒரு பகுதியாக இருக்குமென்று பிரெஞ்சுக்காரர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். சுதந்திரம் கேட்பதற்கு அல்ஜீரியர்களுக்கு உரிமை இல்லை என்றும் பிரெஞ்சுக்காரர்கள் சொன்னார்கள்.

வட ஆப்பிரிக்காவிலுள்ள வேறு எந்த நாட்டையும் விட அல்ஜீரியாதான் மேலைநாட்டு நாகரிகத்தில் மூழ்கிய நாடு.

அல்ஜீரியாவில் மூன்றில் இரண்டு பகுதி 3,000 அடி உயரமான மலைப்பகுதி. சஹாராப் பாலைவனத்துக்கும் மத்திய தரைக்கடலுக்கும் இடைப்பட்ட பகுதியின் உயரம் 7,000 அடிக்கும் மேல் உள்ளது. இது நீலகிரி மலையின் உயரத்துக்குச் சமமாகும்.

கடலோரத்தில் சிறிதளவு மழைபெய்கிறது. பாலைவனத்தை நெருங்க நெருங்க மழையின் அளவு குறைகிறது.

இந்த நாட்டில் குறிப்பிடத்தக்க ஆறு ஒன்றே ஒன்றுதான். இதன் பெயர் செலீப் என்பது, செலீப் காவிரி போன்று 435 மைல் நீளமுடையது. ஒரு சொட்டு நீர்கூட வீணாகாமல் காவிரி நீர் அனைத்தும் வேளாண்மைக்கு உதவுகிறது. உலகத்தில் வேறு எந்த ஆற்றுக்கும் காவிரிக்கு உரிய இந்தப் பெருமை கிடையாது.

வட அல்ஜீரியா மூன்று ஆட்சிப் பகுதிகள் கொண்டது. இப்பகுதிகளின் பெயர் ஓரான், அல்ஜியர், கான்ஸ்டன்டைன். ஓரான் மாநிலம் சிலகாலம் ஸ்பானிஷ் ஆட்சியிலிருந்தது.

தென் அல்ஜீரியாவின் ஆட்சிப் பகுதிகள் 1. ஐன் செப்புரா. 2. கார்டையா, 3. சஹாராப் பாலைவனம் என்பன.

சஹாராப் பாலைவனத்தில் ஆட்சி செய்வதற்கு என்ன இருக்கிறது என்று வாசகர்கள் நினைக்கக்கூடும். இமயமலை ஓரத்திலும் சீன எல்லையிலும் மக்கள் நடமாட்டமில்லாத பகுதிகளில் நமது அரசினர்

கவனம் செலுத்தாததால் பல்லாயிரம் சதுர மைல் இந்தியப் பரப்பு சீனருக்கு உரியதாகிவிட்டது. அல்ஜீரியாவில் இத்தகைய நிலையில்லை.

## மக்கள்

அல்ஜீரிய மக்களில் வெளிநாடுகளிலிருந்து குடியேறி வாழ்பவர்கள் யூதரும் பிரெஞ்சுக்காரரும் ஆவர், யூதர் பெரும் முதலீடுள்ள தொழில்களில் ஈடுபட்டனர். பிரெஞ்சுக்காரர் கடலோர வாணிபம், அரசியல் அலுவல் அல்லது போர்த்துறைப் பணியில் இருந்தனர். அவர்களில் பலர் எளிய நிலையிலிருந்தபோது பிரான்சிலிருந்து குடியேறியனர்.

இந்த நாட்டுக்கே உரியவர்கள் என்று சொந்தம் கொண்டாடுபவர்கள் முஸ்லீம்கள். அல்ஜீரிய முஸ்லீம்கள் இருவகையினர். காலத்தால் முற்பட்ட பெர்பர்கள் பிற்காலத்தில் வந்து எண்ணிக்கைப் பெருக்கமும் செல்வாக்கு மிகுதியும் பெற்ற அராபியர்களுடன் இணைந்துவிட்டனர்.

பிரெஞ்சு ஆட்சி ஆப்பிரிக்காவில் நடந்த போது அல்ஜீரிய முஸ்லீம்கள் பிரெஞ்சுச் சட்டப்படி சில சலுகைகளையும் கொரான் சட்டப்படி சில உரிமைகளையும் கோரினர்கள், இதைப் பிரெஞ்சு அரசு ஏற்கவில்லை. பிரெஞ்சுக் குடியுரிமை பெறுபவர்கள் பிரெஞ்சுச் சட்டத்தை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் ஆணையிட்டார்கள். இதை எதிர்த்து ஊலிமாக்காள் கிளர்ச்சி செய்தார்கள்.

கிளர்ச்சியைப் பிரெஞ்சுக்காரர் பொருட்படுத்தவில்லை. பிரெஞ்சுச் சட்டத்தை மட்டும் ஏற்றுக் கொண்ட முஸ்லீம்கள் 60,000 பேர். பிரெஞ்சு பாராளு

மன்றத்திற்கு வாக்களிக்கும் உரிமையும் பிரான்சில் சொத்து வாங்குவதற்கும் வாழுவதற்கும் உரிமைகளும் அவர்களுக்கு மட்டுமே இருந்தது.

**வரலாறு**

*16*-ஆம் நூற்றுண்டுவரை அல்ஜீரியாவின் வரலாறு குறிப்பிடக் கூடியதாக இல்லே. அந்த நூற்றுண்டில் துருக்கிப் பேரரசின் ஆட்சி அல்ஜீரியாவில் நடந்தது. அப்போது பிரெஞ்சு வணிகர் அல்ஜீரியாவுக்கு வந்தனர். அவர்கள் அடிமை வியாபாரம் செய்தனர் அல்லது கப்பற் கொள்ளேயில் ஈடுபட்டனர்.

படிப்படியாகப் பிரெஞ்சுக்காரர் செல்வாக்கு அல்ஜீரியாவில் பரவியது. ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு ஆட்சியைக் கைப்பற்ற விரும்பினுர்கள். இந்த நிலேயில் துருக்கிப் பேரரசின் கவர்னர் அல்ஜீரியாவிலுள்ள பிரெஞ்சுப் பிரதிநிதியைக் கன்னத்தில் அறைந்தார். நொண்டிக் கழுதைக்கு சறுக்கினது சாக்கு என்பார்கள். கன்னத்தில் அறைந்ததைக் காரணமாகக் காட்டி பிரெஞ்சுக்காரர்கள் 1830-ல் அல்ஜீரியாவில் தங்களுடைய ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டார்கள். சில ஆண்டுகளுக்குப் பிறகு பிரெஞ்சுக்காரர் அல்ஜீரியாவின் கடலோரப் பகுதிகளில் குடியேறத்தொடங்கினர். பிரான்சின் தென்பகுதிலும் கார்சிகாத் தீவிலும் வாழ்ந்த பிரெஞ்சுக்காரர்கள் தான் அல்ஜீரியாவில் குடியேறினுர்கள்.

இரண்டாம் உலகப் போரில் அல்ஜீரியாவின் கேந்திரமான அமைப்பு மேலேநாட்டாரின் கவனத்தை ஈர்த்தது. 1942-ல் அமெரிக்கப் படைகளும் பிரிட்டிஷ் படைகளும் அல்ஜீரியாவைப் பிடித்துக்கொண்டன. பிரான்சு அப்போது ஜெர்மனியின் ஆட்சிக்கு உட்பட்

டிருந்தது. பிரான்சை விடுவிக்கும் இயக்கத்தின் தலைவராகத் தளபதி டி கால் விளங்கினார்.

டி கால் ஒரு போட்டி அரசாங்கம் அமைத்து அல்ஜீரியாவையும் பிரெஞ்சு ஆட்சியிலிருந்த ஏனைய நாடுகளையும் ஆண்டார். அவருடைய அலுவலகம் 1942 முதல் 1944 வரை அல்ஜீரியாவில் இருந்தது.

**விடுதலைப் போர்**

1937-ல் அல்ஜீரிய மக்கள் கட்சி உருவாயிற்று. இக்கட்சி பல ஆண்டுகள் மறைமுகமாக இயங்கிற்று.

ஆசிய நாடுகள் விடுதலை அடைந்த பிறகு மறைமுகமான இயக்கம் வெளிப்படையான இயக்கமாக மாறிற்று. 1954-ல் பெரிய அளவில் ஒரு கலகம் ஏற்பட்டது, ஆயுதம் தாங்கிய போராட்டமும் நடந்த வண்ணமாக இருந்தது.

1955-ல் அல்ஜீரியாவைப்பற்றி ஐக்கிய நாடுகள் அவை விவாதித்தது. அல்ஜீரியாவின் விடுதலை இயக்கத்தை ஆதரித்து இந்தியா ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தது. இந்த முடிவை ஐ. நா. அவை ஒருமனமாக ஏற்றது.

1956-ல் இந்தியப் பாராளுமன்றத்தில் அல்ஜீரியாவைப்பற்றி ஜவஹர்லால் நேரு பேசினார். அல்ஜீரியக் கிளர்ச்சிக்கு ஆதரவு தருவதாக அவர் உறுதியளித்தார். சில மாதங்களுக்குப் பிறகு ஜவஹர்லால் நேருவும் எகிப்தின் தலைவர் நாசரும் யுகோசுலவியாவின் தலைவர் டிட்டோவும் இதுபோன்ற கூட்டு அறிக்கையை வெளியிட்டனர்.

அல்ஜீரியச் சுதந்திரப் போரில் பத்து லட்சம் பேர் இறந்தனர். வேறு எந்த ஆப்பிரிக்க நாடும் விடுதலை அடைய இவ்வளவு தியாகம் செய்யவில்லை,

பென் பெல்லா, பென் கெட்டா ஆகியோர் தலைமையில் ஒரு கோடி அல்ஜீரிய முஸ்லீம்கள் திரண்டனர். 20,000 பேர் கொண்ட கொரில்லாப் படையையும் இவர்கள் திரட்டினர். உள்நாட்டுப் பகுதிகளில் தூரந்தொலைவில் பல இடங்கள் இந்தப் படையின் ஆட்சியில் இருந்தன. இவர்கள் வரிகளை வசூலித்தார்கள்; பிரெஞ்சு ஆட்சிக்கு ஆதரவாக இருந்தவர்களைத் தண்டித்தார்கள்; சில சமயம் அவர்களைக் கொன்றார்கள்.

கொரில்லாப் படையை ஒழிக்க, 5 லட்சம் பேர் கொண்ட பிரெஞ்சுப் படையைப் பிரெஞ்சு அரசினர் ஏவிவிட்டனர். முதலில் கொரில்லாப் படையிடம் பிரெஞ்சுப்படை தோற்றது. இதனால் பிரெஞ்சு வீரர்கள் ஆத்திரத்துடன் போரிட்டனர். ஆத்திரத்தில் நிதானம் தவறினர். அதன் விளைவாக, பொது மக்களின் ஆதரவு கொரில்லாப் படைக்குப் பன்மடங்காகப் பெருகிற்று. பிரெஞ்சு அறிஞர்கள் அல்ஜீரியாவில் நடக்கும் கிளர்ச்சிக்கு ஆதரவாகவும் பிரெஞ்சு அரசினரைக் குறைகூறியும் எழுதலாயினர். கொரில்லாப் படை, 40,000 பேர் கொண்ட செம்மையான முறையான படையாக 1958-ல் மாறிற்று.

இனிமேல் பிரான்சு அல்ஜீரியாவை ஆள முடியாது என்று டி கால் கருதினார்; அவர் கருத்தைப் பிரெஞ்சுப் படையினர் ஏற்கவில்லை. 1960-ல் ஆட்சியாளர்க்கும் போர்வீரர்க்கும் ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்க, அல்ஜீரியாவில் 1961-ல் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அதன் விளைவாக. அல்ஜீரியா ஒரு சுதந்திர நாடு என்று 3-7-1962-ல் டி கால் அறிவித்தார்.

**கான்ஸ்டன்டைன்**

வட ஆப்பிரிக்காவின் உள்நாட்டு நகரங்களுள் இதுவே முக்கியமான நகரம்.

ஏழரை ஆண்டுகள் நடந்த விடுதலைப்போரில் இந்த நகரம் சேதப்பட்டது. இன்றைய நகரம், முற்றிலும் புதுப்பித்துக் கட்டப்பட்ட நகரம்.

ஈராயிரம் ஆண்டுகளாக இந்நகரம் கிழக்கு அல்ஜீரியாவில் வணிகப் பெரு நகரமாக விளங்கி வந்திருக்கிறது. கடற்கரையிலிருந்து இது 60 மைல் தொலைவிலும் அல்ஜீயர்சிலிருந்து 350 மைல் தொலைவிலும் இருக்கிறது. உள்நாட்டு நகரமாய் இருந்தபோதும் இங்கும் ஏராளமான வெளிநாட்டவர் இருக்கிறார்கள்.

இந்நகருக்கு நீண்ட வரலாறு உண்டு. 82 போர்களில் இது களமாக இருந்திருக்கிறது. மிகப் பழமையான பொருள்களை புதை பொருள் துறையினர் இங்கு கண்டு பிடித்திருக்கிறார்கள். ரோமாபுரிப் பேரரசின் போது இந்நகரம் சிற்று என்ற பெயருடன் விளங்கிற்று. கி. மு. 311-இல் இந்த ஊர் அழிந்துவிட்டது. ரோமாபுரியை ஆண்ட கான்ஸ்டன்டைன் என்ற பேரரசர் இந்த நகரைப் புதுப்பித்தார். அவர் பெயராலேயே இந்நகரம் இன்று விளங்குகிறது. மாறிமாறி எத்தனையோ படையெடுப்புக்களுக்கு இந்த நகரம் ஆளாயிற்று. சலாபே என்ற அரசரின் ஆட்சியில் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் 23 ஆண்டுகள் இந்த நகரின் பொற்காலமாக இருந்தது. சாலைகளும் பாலங்களும் கட்டிடங்களும் நூலகங்களும் ஏற்பட்டன.

கான்ஸ்டன்டைனும் அவருக்குப் பிறகு சலாபேயும் அவருக்குப் பின் வந்த எத்தனையோ பேரும் கொல்லப்பட்டிருக்கின்றனர். 19-ஆம் நூற்றாண்டிலும் இந்த

நகரத்தின் வரலாறு குழப்பமும் கொந்தளிப்புமாயும் தான் இருந்தது, 20ஆம் நூற்றுண்டில் அல்ஜீரியாவின் விடுதலைப் போர் இந்த நகரத்தின் தெருச்சண்டையாக நடைபெற்றது. புதைந்து கிடக்கும் மலை, பாதாளத்தில் இருக்கும் நீரூற்று, இரசாயனச் சத்துக்கள் உள்ள குளியல் ஏரி ஆகியவை இந்நகரத்தில் காணப்படுகின்றன. 2500 ஆண்டுகளில் ஆட்சிநடத்திய பல்வேறு அரசுகளின் சின்னங்கள் இந்நகரத்திலுள்ளன. இந்நகரிலுள்ள ஒரு பாலம் உயரத்தாலும் நீளத்தாலும் புகழ் பெற்றது.

**அல்ஜியர்ஸ்**

அல்ஜீரியாவின் பெரு நகரம் அல்ஜியர்ஸ். இது ஒரு துறைமுகப் பட்டினம். ஒன்றுக்கொன்று உயரமான தளத்தில் அடுக்கடுக்காக, மாளிகைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

இது ஒரு பிரெஞ்சு நகரமாகத் திகழ்கிறது. கடைகள், தெருக்கள், கூரைமீதமைந்த தோட்டங்கள் யாவும் பிரெஞ்சு மயமானவை. மார்சே என்னும் பிரெஞ்சுத் துறைமுக நகரமும் அல்ஜியர்சும் இரட்டைக் குழந்தைகள் போல வளர்ச்சியடைந்துள்ளன. ஒரே ஒரு வேறுபாடு உண்டு. அல்ஜியர்ஸ் சந்தை நகரமாகத் தோன்றியது. அதையொட்டி, இங்கே குடியேறியவர்கள் சில ஆயிரம் பேர் சேரிகளில்—அவற்றின் தூய்மையில்லாச் சூழலில்—நெருக்கமாக வாழ்கிருர்கள். அங்குள்ள நிலை ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம் என்ற நிகழ்ச்சியை நினைவூட்டும்,

நபிகள் நாயகத்தின் நாள் இந்நகரில் பெருஞ் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. வெள்ளை. பச்சை,

சிவப்பு ஆகிய மூன்று நிறங்களையும் கொண்ட மெழுகு வர்த்திகளை ஏற்றி, அண்டலூசியின் இசை என்ற தொன்மையான இசை நிகழ்ச்சியுடன் மசூதிகளில் இவ்விழா நிகழும்.

**சிடி பெல் அப்பீஸ்**

இது ஒரு சிறு நகர். பிரெஞ்சுப் படையின் அலுவலகம் இங்கு இருந்தது. எனவே, பூனுவின் கடக்வஸ்லாவைப் போன்ற சிறப்பு, இந்நகருக்கு உண்டு.

**ஓரான்**

இந்நாட்டில், இரண்டாவது நகரம் ஓரான். இது ஸ்பெயினுக்கு அருகே உள்ளது. ஸ்பெயின் நாட்டு ஆட்சியில் இருந்ததால், அந்தப் பண்பில் வளர்ந்திருக்கிறது. உப்புத் தண்ணீர்க்கும் உவர் மண்ணுக்கும் புகழ் பெற்றது ஓரான்.

**பல்சுவை**

அல்ஜீரியாவின் பரப்பு இந்த நாட்டை ஆண்ட பிரான்சைப்போல நான்கு பங்கு, அதாவது எட்டரை லட்சம் சதுரமைல். இதில் தென்பகுதி ஏழரை லட்சம் சதுரமைல். நாட்டில் முக்கால் பங்குக்கு மேலிருக்கும் இப்பகுதி பாலைவனப் பகுதியாக இருக்கிறது.

இந்த நாட்டின் மக்கள் தொகை ஒரு கோடி பதினான்கு லட்சம். பாலைவனத்தில் 14 லட்சம் பேரும் எஞ்சிய அரைக்கால் பங்குப் பரப்பில் ஒரு கோடிப் பேரும் வாழ்கின்றார்கள்.

**தேசிய வாகனம் :** ஒட்டகம்.

**நாடெங்கும் பரவியுள்ள தொழில் :** பெண்கள் பிள்ளை பெறுவதும் ஆடவர் கடற்கொள்ளையடித்தலும்.

**ஏற்றுமதிகள் :** சீமை அவல், திராட்சை, சிட்ரஸ் பழம், மதுவகை, கார்க்கு, காய்கறி.

**இருப்பது :** ஓரிடத்தில் மட்டும் 250 கோடி டன் பெட்ரோலிய எண்ணெய்.

தலைநகர்—அல்ஜியர்ஸ்.

துறைமுகங்கள்—அல்ஜியர்ஸ், ஓரான்.

வணிகநகரம்—கான்ஸ்டன்டைன்.

மொழிகள்—பிரெஞ்சு, அரபு.

மதம்—முக்கால்வாசிப்பேர் முஸ்லீம்கள். ஏனை யோரில் பிரெஞ்சுக்காரர் கத்தோலிக்கர். பிரெஞ்சுக் காரர்களிலும் யூதர்களிலும் பெரும்பாலோர் தப்பித் தோம் பிழைத்தோம் என்று ஓடிவிட்டனர். அவர்கள் நிலை பர்மாவில் வாழ்ந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்தவர்கள் நிலைபோல இருக்கிறது.

> **''இஸ்லாம் எங்கள் மதம்,**
> **அரபு எங்கள் மொழி,**
> **அல்ஜீரியா எங்கள் தந்தையர் நாடு''**

என்ற கருத்துப் பரவிவருகிறது.

# டுனீசியா

அமைப்பாலும் வேறுபட்ட மக்கள் வாழ்வதாலும் சுதந்திரத்துக்குப்பின் கடைப்பிடித்துவரும் தனிக் கொள்கைகளாலும் டுனீசியா புகழ்பெற்றிருக்கிறது.

வட ஆப்பிரிக்காவின் கடற்கரையில், லிபியாவுக்கும் அல்ஜீரியாவுக்கும் இடையே உள்ளது டுனீசியா.

இந்த நாட்டின் வடகிழக்கு மாநிலத்திலிருந்து 86 மைல் தொலைவில் சிசிலி என்ற நாடு இருக்கிறது. ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, பொனீசியர்களும் ரோமாபுரி நாட்டினரும், பெர்பரும் பிறகு பிரெஞ்சுக்காரரும் குடியேறிய நாடு இது. பழங்காலத்து ரோமர்கள் டுனீசியா நாட்டைத்தான் ஆப்பிரிக்கா என்று குறிப்பிட்டு வந்தார்கள். 15-ம் நூற்றுண்டில் போர்த்துக்கீசியர் தமிழ் நாட்டை மலபார் என்று எழுதி வைத்திருப்பது இங்கே ஒப்பு நோக்கத்தக்கது.

பரப்பில் டுனீசியா, தமிழ்நாட்டுக்குச் சமம். ஆப்பிரிக்காவிலேயே பெரிய நாடு சூடான். சூடானின் பரப்பில் இருபதில் ஒரு பகுதிதான் டுனீசியாவின் பரப்பு (48,312 சதுரமைல்).

**மக்கள்**

டுனீசியாவின் மக்கள் தொகை 50 லட்சம்; தமிழ் நாட்டில் எட்டில் ஒரு பங்கு. இவர்களில் ஒரு லட்சம்

பேர் பிரெஞ்சுக்காரர். ஸ்பெயின், மால்ட்டா, கிரீஸ் நாட்டினரும் யூதரும் ஒன்றரை லட்சம்பேர். இத்தாலியர் ஒரு லட்சம்.

இப்போது யூதர் தொகை 80,000. இவர்கள் 3,000 ஆண்டுகளாக இங்கே வாழ்ந்து வருகின்றனர். 1950 அளவில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர் இருந்தனர். இஸ்ரேலுக்கு எதிர்ப்பான உணர்ச்சி ஏற்பட்டதும் சிலர் வெளியேறிவிட்டனர். ஏனைய ஆப்பிரிக்க நாடுகளைப்போல இங்கும் யூதர் பேங்குகள் நடத்துகின்றனர். நகை, தங்கம் முதலிய வியாபாரங்கள் செய்கின்றனர்.

இத்தாலியர் தொழிலாளராகவே உள்ளனர்.

ஏனைய மக்கள் அனைவரும் தங்களை டுனீசியராகவே கருதுகின்றனர். மொராக்கோ அல்ஜீரியாவில் வாழும் மக்களைப்போல் டுனீசிய முஸ்லிம்கள் தங்களை அரேபியராக நினைப்பதில்லை. வங்காளிகள் தங்களை இந்தியர் என்று சொல்லிக்கொள்வதைவிட, வங்காளி என்று சொல்லிக்கொள்ளுவதிலேயே பெருமைப் படுகின்றனர். டுனீசியர் உணர்ச்சியும் இத்தகையதே.

டுனீசியர், சுன்னி என்ற முஸ்லிம் இனத்தினர்.

பிற அரபு நாட்டினரைவிட இவர்கள் முன்னேற்றம் அடைந்தவர்கள். டுனீசியர் பல நாடுகளுடன் உறவு கொண்டவர்கள். கலந்து பழகும் இயல்பினர். படித்தவர்கள். வெறி இல்லாதவர்கள். சேர்ந்துவாழும் போக்கினர். பெண்களும் படித்திருக்கிறார்கள். அவர்களுக்கும் சுதந்திரம் உண்டு. அவர்கள் முக்காடுக்கு முழுக்குப் போட்டுவிட்டனர்.

டுனீசியாவில் மசூதிகளுக்குள் முஸ்லிம்கள் அல்லாதவர்களும் செல்லலாம்.

அரசியல் வேறுபாடுகள் அமைதியாகவும் அறிவுக் கண்ணோட்டத்துடனும் ஆராயப்படும் நாடு டுனீசியா. இந்நாட்டினர் சொற்போருக்கு வருவார்கள், மற்போரில் இறங்கமாட்டார்கள்.

**மொழிகள்**

அரபு, பிரெஞ்சு, இத்தாலிய மொழிகள் இங்கு நிலவுகின்றன. அரபு, பிரெஞ்சு மொழிகளில் சிறந்த இலக்கிய வார ஏடுகள் இங்கிருந்து வெளிவருகின்றன.

இன்றளவும் பள்ளிக்கூடங்களிலும் அரசின் அலுவலகங்களிலும் பிரெஞ்சுமொழி பெரிய அளவில் வழங்கப்படுகிறது. 1881 முதல் 1956 வரை பிரெஞ்சு ஆட்சி நடைபெற்றதே இந்த நிலைக்குக் காரணம் ஆகும்.

**தலைநகர்**

இந்நாட்டின் தலைநகர் டுனிஸ். மக்கள் தொகை எட்டு லட்சம். ஐரோப்பிய மயமாகிவரும் நகரம் என்று இந்நகரைச் சொல்லலாம்.

கார்த்தேஜ் என்பது இந்நகரின் முன்னைப்பெயர். கார்த்தேஜ், வரலாற்றுப் புகழ்பெற்றது. பழமைச் சிறப்புடையது.

பைஜர்டாவில் கடற்படைத்தளம் இருக்கிறது. ஸ்ஃபாக்ஸ் என்னும் துறைமுகம் பாஸ்பேட் ஏற்றுமதியால் விரிவடைந்திருக்கிறது.

**புவியியல் வளம்**

பாஸ்பேட், இந்த நாட்டின் பெரிய ஏற்றுமதி. இரும்புத்தாது, ஈயத்தாது, துத்தநாகம் ஆகியவையும் தோண்டி எடுக்கப்படுகின்றன.

மலைப்பகுதிகளில் கிடைக்கும் 'கார்க்கு', புட்டிகளை அடைக்க உதவுகிறது. கார்க்கு ஏற்றுமதியால் இந்த நாடு வருவாய் பெறுகிறது,

**வேளாண்மை**

பயிர்த் தொழிலில் டுனீசியாவின் புகழ் பழமொழிகளிலும், ரோமாபுரியின் வரலாற்றிலும் இடம் பெற்ற சிறப்புடையது.

முக்கிய விளைபொருள் கோதுமை, சீமை அவல். பார்லி, ஆலிவ் எண்ணெய், சிட்ரஸ் பழங்கள் ஆகியவையும் உற்பத்தியாகின்றன,

இந்த நாட்டிலுள்ள வெள்ளாடுகளும் செம்மறி ஆடுகளும் கொளுப்பான வாலை உடையன. இவ்வகை ஆடுகளை வளர்ப்பது இங்கு ஒரு பெரிய தொழிலாகப் பரவி இருக்கிறது.

**தொழில்கள்**

மாவு அறைத்தல், எண்ணெய் துப்புரவு செய்தல், ஈயத்தை உருக்குவ்து, உயர்ந்த குடிவகைகளை உற்பத்தி செய்வது ஆகிய தொழில்களை ஐரோப்பியர் பரப்பியுள்ளளர். கம்பளி நெசவு, தோல் பொருள்கள் செய்தல் இவ்விரண்டும் டுனீசியரின் தனி உரிமையாக இருக்கிறது. வணிகம் பெரும்பான்மையும் பிரான்சுடன் நிகழ்கிறது.

திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியில் சுதந்திர டுனீசியா மாபெரும் வெற்றி கண்டிருக்கிறது. இதற்குக் காரணம் வட ஆப்பிரிக்காவிலேயே இங்குதான் திறமையான ஆட்சி நடைபெறுகிறது. லஞ்சமும் மிகக் குறைவு. தொழில் நுட்பம் தெரிந்த பிரஞ்சுக்காரரை விரட்டிவிடவில்லை கல்வி நிலையங்களிலும் பல பிரெஞ்

சுக்காரர் பணிபுரிகின்றனர். மக்களின் பொருளாதார மேம்பாட்டில் அரசினர் கவனஞ் செலுத்துகின்றனர். ஊருக்கு உபதேசம் செய்யும் அரசியல் சித்தாந்தங்களிலும் வெளிநாட்டு கொள்கைகளிலும் அவர்களுடைய நேரம் வீணுகவில்லை.

**வரலாறு**

19-ஆம் நூற்றுண்டில் பிரான்சு, இத்தாலி, பிரிட்டன், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கிடையே வாணிபப் போட்டி நடந்தது. அப்போது பிரான்சு, டுனீசிய அரசுடன் ஓர் உடன்பாடு செய்துகொண்டது. அதன் பயனுய், பிரெஞ்சுக்காரரின் மேலாதிக்கத்திற்கு டுனீசியா உட்பட்டது.

இரண்டாம் உலகப் போரில் ஜெர்மன் படைகள் டுனீசியாவில் இறங்கின. லிபியாவிலிருந்தும் அல்ஜீரியாவிலிருந்தும் வந்த பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகளுடன் ஜெர்மன் படை பொருதி, 1943இல் சரணடைந்தது. பிறகு டிகால் தலைமையில் மீண்டும் பிரான்சு சுதந்திர நாடாக ஆயிற்று.

பிரெஞ்சு ஆட்சியிலிருந்த பிற நாடுகளைவிட டுனீசியா பல வழிகளில் வளர்ச்சியடைந்திருந்தது.

1934இல் டுனீசியாவில் தேசிய உணர்ச்சி உருவாயிற்று. 1952இல் அது வெடித்தது. மின்சாரக் கம்பிகளும் போக்குவரத்து வாகனங்களும் சேதப்பட்டன. பிரெஞ்சுப் போர்வீரர் பலர் இந்நிகழ்ச்சிகளில் உயிர் நீத்தனர்.

1956இல் பிரான்சு, டுனீசியாவுக்குச் சுதந்திரம் வழங்கிற்று.

**சுதந்திரத்துக்குப் பின்**

டுனீசியாவில் வல்லமை பொருந்திய அரசு ஏற்பட்டிருக்கிறது. இங்குள்ள பெரிய அரசியல் கட்சியின் பெயர் நியூ தெஸ்த்தூர் என்பது.

இந்நாட்டின் தலைவர், நாட்டுமக்கள் எல்லோராலும் தேர்ந்தெடுக்கப் பெறுகிறார். 1959-இல் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெற்று இன்றளவும் டுனீசியக் குடியரசின் தலைவராக இருந்துவருபவர் பவுரிகுபா.

பவுரிகுபா முன்னேற்றக் கருத்துடையவர். காலத்துக்கேற்ப முஸ்லிம்கள் தங்கள் கொள்கைகளைத் தளர்த்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்தினர். முஸ்லிம்கள், குறிப்பிட்ட ஒரு மாதம் முழுவதும் உண்ணு நோன்பு இருப்பதால், பகல் பொழுதெல்லாம் வேலை செய்யமுடியாமல் நேரம் வீணுகிறது என்பது இவர் கருத்து. டுனீசியாவிலுள்ள மதத் தலைவர்களும் இக்கருத்தை ஏற்றனர். உண்ணு நோன்பு மாதத்தில் சாரணர்களுக்கும் போர்ப்படையினருக்கும் அரசினர் பகல் நேரத்தில் மட்டுமே உணவு படைத்தனர். உணவு விடுதிகள் இரவில் அடைக்கப்பட்டன. பொது மக்கள் இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் முஸ்லிம்களுடைய மதக் கொள்கைகளை நிலைநாட்ட கிராண்டு முப்டி எனிற பெயரில் ஓர் அலுவலர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர், குடியரசின் துணைத் தலைவர் போன்றவர்.

பொதுவாக, பவுரிகுபாவின் ஆட்சி சிறந்த ஆட்சியாக அமைந்திருக்கிறது. யூதநாடாகிய இஸ்ரேலுடன் ஒத்துவாழ்வதே முஸ்லிம் நாடுகளுக்கு நன்மை பயக்கும் என்பது இவர் கருத்து.

# லிபியா

சோமாலியா போன்று வெளிநாட்டு உதவியை விரும்புகிறது லிபியா.

எகிப்தைப் போலப் பெரும்பகுதி பாலைவனமாக இருக்கிறது லிபியா.

சூடானைப் போல ஒற்றுமையில்லாத நாடாக உளது லிபியா.

அல்ஜீரியாவைப் போலப் பெட்ரோல் செல்வம் நிறைந்த நாடு லிபியா.

எத்தியோபியாவைப் போல மன்னர் ஆட்சியுடையது லிபியா.

திருவிதாங்கூர்ச் சீமை பத்மநாபசுவாமிக்கு உரியது என்றும் அவருடைய தாசராகத்தான் தாங்கள் ஆட்சி செய்ததாகவும் திருவிதாங்கூர் மன்னர்கள் கூறினர். லிபியாவின் அரசரும் இவ்வாறே கூறி வருகிறார்.

லிபியா ஆப்பிரிக்காவின் வடகோடியிலுள்ள நாடு. இது மத்திய தரைக்கடல் ஓரமாக உள்ளது. 2500 ஆண்டுகளாக வேறுபட்ட நாடுகளின் ஆட்சியிலிருந்த பிறகு 1951 இறுதியில் லிபியா இந்தியாவிலிருந்தும் ஐ. நா. மேற்பார்வையிலிருந்தும் சுதந்திரம் பெற்றிருக்கிறது. இரண்டாம் உலகப் போர் இந்த நாட்டில்

பெரிய அளவில் நடைபெற்றது. வல்லரசுகளின் பார்வையெல்லாம் பதிந்துள்ள இந்த நாடு அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் முன்னேறி எண்ணெய் வளத்தால் செல்வம் கொழிக்கிறது.

மத்திய தரைக்கடல், எகிப்து, சூடான், பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிக்கா, அல்ஜீரியா, டுனீசியா இவை சூழ்ந்த நாடு லிபியா, இதன் பரப்பு 6,80,000 சதுர மைல் (இந்தியாவின் பரப்பு 12 லட்சம் சதுர மைல்) ஆப்பிரிக்காவில் லிபியா நான்காவது பெரிய நாடு, இந்நாட்டில் 10ல் 9 பகுதி பாலேவனம், இதனுல் இந் நாட்டின் மக்கள் தொகை 15 லட்சம் தான். இவர்களில் 12 லட்சம் பேர் கடலோரப் பகுதிகளில் வாழ்கின்றனர். ட்ரிப்போலி (இதைத் தமிழ் ஒலி முறைக்கு ஏற்ப, 'திரிப்போலி' என்போம்), பெங்காஜி, டெர்ளு என்ற மூன்று நகரங்களே உள்ளன. இவற்றின் மக்கள் தொகை முறையே இரண்டு லட்சம், 60,000, 20,000. ஏனைய ஊர்கள் யாவும் சிற்றூர்களே. பெய்டா என்னு மிடத்தில் புதிய தலைநகரம் கட்டப்பட்டு வருகிறது. இது திரிப்போலியிலிருந்து 520 மைல் தொலைவில் இருக் கிறது. வெளிநாட்டமைச்சரவை அலுவலகமும் பாராளுமன்றக் கூட்டங்களும் இங்கு நடந்து வருகின்றன.

**மக்கள்**

இந்த நாட்டின் தொன்மையான மக்கள் பெர்பெர் எனப்படுவர். 7-ஆம் நூற்றுண்டில் அராபியநாடுகளி லிருந்து முஸ்லிம்கள் குடியேறினர், 500 ஆண்டுகள் இரு இனத்தவர்க்கும் போராட்டம் நடைபெற்றது. இன்றளவும் பெர்பெர்கள் வாழ்க்கை முறைகளில் அவர்களுடைய தனித்தன்மை காணப்படுகிறது. பெர்

பெரிலும் சரி, அராபியரிலும் சரி நிலையான குடியிருப் பிடமின்றிச் சுற்றித் திரிவோர் ஏராளமாக உள்ளனர். தங்களுடைய கால்நடைகளுக்குப் புல்லும் நீரும் தேடுவது இவர்களுடைய வாழ்க்கையில் பெரிய போராட்டமாக இருக்கிறது. பழைய நகரங்களைச் சுவ ராகவும் ஈச்ச மரத்தில் செய்த கதவுகளும் கொண்டு வீடு கட்டி வாழ்கின்றனர்.

வெளிநாட்டாரில் இத்தாலியர் 50 ஆயிரம்பேரும், யூதர் சில ஆயிரம் பேரும் உள்ளனர்; அரசாங்க அலு வல்களிலும் தொழில் வாணிபத் துறைகளிலும் அமெரிக்கர், ஆங்கிலேயர், எகிப்தியர் சில நூறுயிரம் பேர் பணி புரிகின்றனர்.

**வரலாறு**

கி. மு. 600-இல் கார்த்தேஜர்கள் இந்த நாட்டைப் படையெடுத்தனர். அந்நாள் முதல் மாறிமாறிப் பல நாடுகள் லிபியாவைப் பிடித்து அடக்கி வந்திருக் கின்றனர். ரோமர்கள், பைஸாண்டியர்கள், அராபியர் ஸ்பானியர், துருக்கியர், இத்தாலியர் ஆகியோர் இவ் வாறு லிபியாவை ஆண்டிருக்கின்றனர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆண்டோம் என்ற எண்ணம் இத்தாலியருக்கு நெடுங்காலமாக இருந்தது. மத்திய தரைக்கடலில் ஒருகரையில் இத்தாலியும் எதிர்க்கரை யில் லிபியாவும் இருப்பதால் இத்தாலியருக்கு இந் நாட்டின் நினைவு அகலவில்லை. 1934-இல் இத்தாலிய சர்வாதிகாரியான முசோலினி இந்த நாட்டைப் பிடித்துக் கொண்டார். இரண்டாவது உலகப்போர் தொடங்கியதும் இங்கிருந்த இத்தாலியப் படை எகிப்துக்குள் 60 மைல் வரைபிடித்துக் கொண்டது. அப்போது அப்படைகள் கெய்ரோவையும் பிடித்துக்

கொண்டிருந்தால் உலகின் வரலாறே மாறியிருக்கக் கூடும்.

நேச நாடுகளின் படைகள் லிபியாவில் இறக்கப் பட்டு லிபியாவின் பெரும் பகுதியில் போர் நடை பெற்றது. இத்தாலியர்களுடைய ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. 1943 முதல் பெரும் பகுதியில் பிரிட்டிஷ் இராணுவ ஆட்சியும் ஒரு சிறு பகுதியில் பிரெஞ்சு ஆட்சியும் நடைபெற்றது.

இந்நாட்டைப்பற்றி ஐக்கிய நாடுகள் அவையில் விவாதம் நடைபெற்றது. ரஷ்யா உட்பட பல ஐரோப்பிய நாடுகள் இந்நாட்டில் சில பகுதிகளை யேனும் தங்கள் செல்வாக்குள் வைத்துக்கொள்ள முயன்று திட்டங்கள் தீட்டின. ஆனால் லிபியா 1952க் குள் சுதந்திர நாடாக இருக்க வேண்டுமென்று ஐ. நா. அவை 1949 நவம்பர் 17-இல் முடிவு செய்தது. 1951-இல் தேர்தல்கள் நடைபெற்றன. அதே ஆண்டில் டிசம்பர் 22-ம் நாள் லிபியா சுதந்திரம் பெற்றது.

இந்த நாட்டின் மன்னராக சையது முகம்மது இட்ரீஸ்—எல்—செனுஸி என்பவர் நியமிக்கப்பெற்று இருக்கிறார். இவர் லிபியோவில் பரவியுள்ள செனுமி என்ற இஸ்லாமிய மதத்தலைவர்; சைரனேசியா பகுதியைச் சேர்ந்தவர். இத்தாலியருடைய ஆட்சியை எதிர்த்து இன்னல்பட்டவர். எகிப்துடன் நல்லுறவு கொள்ளுவதற்காக இவர் எகிப்தியப் பெண் ஒருத்தியை தம் மனைவியருள் ஒருத்தியாக வைத்துக்கொண்டிருக் கிறார். இவருக்கு இரண்டு பிரச்சினைகள் உண்டு. ஒன்று அளவு கடந்த செல்வத்தை என்ன செய்வது என்பது; மற்றொன்று பரம்பரை மன்னர் உரிமை தமக்கு இருந்தும் ஆண் சந்ததி இல்லாமை.

*1950*-ஆம் ஆண்டில் தேசிய சட்டசபை நிறைவேற்றிய அரசியல் சட்டப்படி இந்நாடு ஆளப்படுகின்றது. இச்சட்டம் பெரும்பாலும் அமெரிக்க ஆட்சிமுறையைத் தழுவி ஆக்கப்பட்டது.

திரிப்போலி, பெங்காஜி ஆகிய இரண்டு நகரங்களுமே தலைநகரங்கள் என்று லிபியா அரசியல் சட்டம் குறிப்பிடுகின்றது.

மக்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கும் சட்டங்கள்—சொத்துரிமை, கொடுக்கல் வாங்கல், கொலை களவு பற்றியன—எகிப்தியச் சட்டங்களைப் பின்பற்றி இயற்றப்பட்டுள்ளன. இறுதி நீதிமன்றத்தில் லிபியர்களோடு அமெரிக்கரும், ஆங்கிலேயரும் எகிப்தியரும் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

**நாட்டின் பெயர்**

இந்நாட்டின் பெயர் லிபியா. இச்சொல்லில் உள்ள நடு எழுத்தை மென்மையாக உச்சரிக்க வேண்டும்.

லிபியாவைக் கண்ட முதல் வெளிநாட்டார் கிரேக்கர்கள். ஆப்பிரிக்காவின் வட பகுதியிலுள்ள எல்லா நாடுகளையும் லிபியா என்ற சொல்லால் அவர்கள் குறிப்பிட்டு வந்தனர். இக்காலத்தில் லிபியா என்னும் சொல் இத்தாலிய சர்வாதிகாரியாக இருந்த முசோலினியால் பிடிக்கப்பட்டு 1934-இல் உண்டாக்கப்பட்ட ஆட்சிப் பகுதியைக் குறிப்பதாகும். இப்பகுதி மூன்று சிறு நாடுகள் அடங்கியது. (1) திருப்பாலிடேனியா (2) சைரனேசியா (3) பெஸ்ஸான்.

இந்த மூன்று பகுதிகளையும் இணைத்து ஒரு நாடாக உருவாக்குவது தான் இன்றைய லிபியாவின் முதல் வேலையாக இருந்து வருகிறது. இப்பகுதிகள் ஒன்றுக்

கொன்று வேறுபட்டவை. திருப்பாலிடேனியா பொனீஷியர்களுடைய தொடர்பை சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பெற்றது. சைரனேசியா கிரேக்கரோடும் எகிப்தியரோடும் நெடுங்காலமாகவே தொடர்பு கொண்டது. திருப்பாலிடேனியா ஆப்பிரிக்காவைப் போன்று வெப்பமான பகுதி. இவ்விரு பகுதிகளிலும் விளையும் காய்கறிகளும் பழங்களும் இவ்வாறே வேறுபட்டுள்ளன.

சைரனேசியா பிரிட்டிஷ் ஆட்சியில் சலுகைகள் பெற்றிருந்தது. கூட்டாட்சி நிலவும் என்றும் சாலுசி இனத்தவர் மன்னராக ஏற்றுக்கொள்ளப்படுவார் என்றும் உறுதிமொழிகள் வழங்கப்பட்டதாலேயே, இப்பகுதிலிபிய நாட்டுடன் இணைந்திருக்கச் சம்மதித்தது.

திருப்பாலிடேனியா என்ற சொல்லுக்கு மூன்று நகரங்களைத் தன்னகத்தே அடக்கியது என்று பொருள்படும். லெப்டிஸ்மக்னு, திரிப்போலி, சப்ரதா என்பவை இம்மூன்று நகரங்கள். இவைபற்றி பின்னர் கூறுவோம். திருப்பாலிடேனியாவில் லிபியா மக்களில் 70% வாழ்கின்றனர். இதனல் இப்பகுதிக்கு அரசியல் செல்வாக்கு மிகுதியாக உண்டு. இப்பகுதியின் பெரிய பிரச்னை மழையின்மையும் வெப்பத்தின் கொடுமையும் ஆகும். ராஜஸ்தான் பாலைவனத்திலிருந்து அனல் காற்று வீசும்போது டில்லியில் தாங்க முடியாத வெப்பமிருக்கும். அவ்வாறே லிபியா பாலைவனத்திலிருந்து வெப்பக்காற்று வீசும்போது திருப்போலியிலும் வெப்பத்தின் கொடுமை தாங்கமுடியாத அளவாக இருக்கும். திரிப்போலிக்கு தெற்கே 10 மைல் தொலைவிலுள்ள அஜீஸ்லியா என்ற ஊரில் வெப்பம் 139 டிகிரி (சென்னையில் 102) வரை இருக்கும். கிப்லி என்ற

காற்று லிப்யாவில் சில சமயம் வீசும். அப்போது எதிரிலுள்ள பொருள்களும் கண்ணுக்குத் தெரிவதில்லை. கார் விபத்துகளும் ஆகாய விமான விபத்துகளும் வேளாண்மைக்குச் சேதமும் வெட்டுப்பூச்சி தொல்லையும் அப்போது ஏற்படுவதுண்டு.

சைரனேசியாவின் பெருநகரம் பெங்காசி. இந்த நகரம் போர்க்காலத்தில் புகழ் பெற்றது. ஓராயிரம் தடவை இந்நகர் மீது குண்டு வீசப்பட்டதால் இது மிகவும் சேதப்பட்டது. 1950-க்குப் பிறகு எண்ணெய்க் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டதால் இப்பகுதி செல்வம் பொழிகிறது. ஆனால் செல்வத்தைவிட இங்கு கொசு மிகுதி. இந் நகரிலேயே லிபியா மன்னர் வாழ்கிறார். சைரனேசியாவின் பொருளாதார அமைப்பு வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டது. இருப்பினும் இப்பகுதிக்கும் திருப்பாலிடேனியாவுக்கும் பல துறைகளில் போட்டா போட்டி நிலவுகிறது.

பெஸ்ஸான் என்பது மிகச் சிறுபகுதி. இதன் பெரும்பகுதி பாலைவனமாக இருக்கிறது. இங்கே வாழுபவர் 40,000 பேர். அரசியல் சிக்கல்களில் பெஸ்ஸான் சைரனேசியாவோடு சேர்ந்து கொள்ளுகிறது. இப்பகுதிக்கு பிரான்சுடன் தொடர்பு மிகுதி. பெஸ்ஸான் லிபியாவிலேயே பிற்பட்ட பகுதி. 1943க்குப் பிறகு இங்கு பிரெஞ்சு ஆட்சி நடைபெற்றதால் எல்லாத் துறைகளிலும் பிரெஞ்சு நாகரிகத்தின் சின்னங்களை இங்கே காண முடிகிறது. லிபியாவில் உடல்நலத் துறையில் மிக மோசமான பகுதி பெஸ்ஸான்.

இம்மூன்று பகுதிகளுக்கும் லிபியா சட்டமன்றத்தில் மேலவையில் சரிசமத்துவமான அளவில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க அரசியல்

சட்டத்திலும் அந்நாட்டின் இராச்சியங்களுக்கு, மேலவையில் சரிசம உரிமை உளது. இந்திய அரசியல் சட்டத்தில் இத்தகைய ஏற்பாடு இல்லாததால், உத்தரப் பிரதேசமும் பீகாரும் அளவுகடந்த செல்வாக்குப் பெற்றுள.

**நகரங்கள்**

**திருப்பாலிடேனியாவில்** உள்ள நகரங்கள் சுற்றுலாச் செல்வோர் காணத்தக்க இனிய காட்சிகளை உடையன. இங்கு வேளாண்மையிலும் வாணிபத்திலும் இத்தாலியர் பலர் ஈடுபட்டிருக்கின்றனர்.

**திரிப்போலி** நகரம் வணிக வளமும் சிறந்த துறைமுகமும் பெற்றது. ஆப்பிரிக்காவிலேயே தூய்மையான நகரம், அழகான நகரம் என்ற பெருமைகளுக்குரியதாக விளங்குகிறது. வண்ண மரங்கள் சாலையெங்கும் உள்ளன. கடல், ஆகாயவிமான போக்குவரத்துகளின் மிகுதியால் இங்கு வெளிநாட்டார் ஏராளமாக வருகின்றனர். 1945க்குப் பின் பல்லாயிரக் கணக்கான அழகிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. தெற்கு இத்தாலியிலுள்ள ஒரு நகரத்தைப் பெயர்த்துக் கொண்டுவந்து வைத்திருப்பது போன்ற எண்ணம் இந்த ஊரைப் பார்த்த அளவில் ஏற்படுகிறது. இங்கு தையற்காரர், கார் ஓட்டுபவர், நாவிதர், வண்ணார் அனைவரும் இத்தாலியரே. துணி வணிகராகவும் அரசாங்க ஊழியராயும் இந்தியர் சிலர் உள்ளனர்.

வெள்ளை நிறக் கூண்டுகளோடு அமைக்கப்பட்ட மசூதிகள் இந்நகரில் ஏராளமாக இருக்கின்றன. நகரிலிருந்து 7 மைல் தொலைவில் வீவர்ஸ் பீல்டு என்ற என்ற விமானத்தளம் அமெரிக்கரால் கட்டப்பட்டிருக்கிறது. திரிப்போலியில் கடலோரமாகவுள்ள சாலையும் பூங்காக்களுடன் கூடிய மாளிகைகளும் அழகிய

கிறித்தவ தேவாலாயங்களும் காண்பவர் மனத்தைக் கவர்கின்றன. அக்டோபர் மாத முதல் மே மாதம் வரை இந்நகரில் ஓரளவு குளிர்ச்சியான காலநிலை உண்டு. லிபிய அரசின் சில அமைச்சரகங்கள் இந் நகரில் இயங்கிவருகின்றன.

**லெப்டிஸ்** மக்ஞ என்ற நகரம் 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்காவிலேயே பெரிய நகரமாக இருந்த தாம். ரோமர்கள் ஆப்பிரிக்காவை ஆண்டபோது அவர்கள் அமைத்த கலைச்செல்வங்களும் சலவைக் கல்லால் ஆன தூண்களும் காணத்தக்கன. உலகத்தி லேயே பார்க்கக்கூடிய சிறந்தகாட்சிகளுள் இந்நகரத்தி லுள்ள புதைபொருள் காட்சிகள் குறிக்கத்தக்கன.

**சப்ரதா** என்ற ஊரில் 5000 பேர் உட்காரக்கூடிய கலையரங்கத்தை ரோமானியர்கள் கட்டியுள்ளனர். இது இன்றளவும் பயன்பட்டு வருகிறது. கடல்காற்றில் இந்நகரத்திலுள்ள பழமைச் செல்வங்கள் அழிந்திருப் பதால் கட்டடப் பொருள்கள் சாலை போடுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இது கங்கைகொண்ட சோழபுரத்து மதிற் சுவர்களை இடித்து, ஆங்கிலேயர் 'லோயர் அணைக்கட்' கட்டியதை நினைவுபடுத்துகிறது.

சைரனேசியாவிலுள்ள ஜெபல்-அக்டார் என்ற மலைப்பகுதி கோடைக்காலத்தில் வாழ வசதியுடையது. சூன் முதல் செப்டம்பர் வரை லிபியா மன்னரும் லிபியாவிலுள்ள வெளிநாட்டுத் தூதர்களும் இந்த மலையிலுள்ள பெய்டா என்ற ஊரிலேயே வாழ்வது வழக்கம். இந்த ஊரும் இதை அடுத்துள்ள சைரீன் என்ற ஊரும் ஓரளவு வளமானவை. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ரோமர்களும் கிரேக்கர்களும் இங்கு தோட்டங்களை ஏற்படுத்தினர்.

### மொழி

இந்த நாடெங்கும் அரபு (அராபிக்) மொழி பேசப்படுகிறது. இத்தாலிய ஆட்சியில் இந்த நாடு இருந்ததால் நகரங்களில் இத்தாலி மொழி தெரிந்தவர்கள் இன்னு பலர் இருக்கின்றனர். 1943க்குப் பிறகு ஆங்கிலம் பெரிதும் பரவியிருக்கிறது. அறிக்கைப் பலகைகள் யாவும் அராபிக் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் எழுதப்பெற்றுள்ளன. ஆங்கிலத்தில் நாளிதழ்கள் வெளிவருகின்றன.

**நாணயம்:** இந்நாட்டின் நாணயம் பவுன். ஒரு லியப்பவுன் இந்திய ரூபாய் 21க்குச் சமம்.

### கல்வி நிலை

இத்தாலியர் லிபியாவை விட்டு ஓடியபோது லிபியர்களில் 16 பேர் மட்டுமே பல்கலைக்கழகப் பட்டங்கள் பெற்றிருந்தனர். சுதந்திரம் பெற்ற பிறகு கல்வித் துறையில் பெரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. எகிப்திய முறையில் கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### பொருளாதார நிலை

அரபு நாடுகளிலேயே ஏழையான நாடு லிபியா. பாலைவனம் மிகுந்திருப்பதால் தண்ணீர் கிடைப்பது என்பது இங்கு தங்கம் கிடைப்பது போல அரிதாக இருக்கிறது. மண் மலைகள் மீது காற்று கடுமையாக அடித்தால் ஆலங்கட்டி மழை பொழிகிறது. வேளாண்மைக்கு வேண்டிய தண்ணீரும் கிடைப்பதில்லை. ஒட்டகங்களுக்கும், குதிரைகளுக்கும், கழுதைகளுக்கும் வேண்டிய குடிநீரைப் பங்கிட்டு கொள்வதில் மக்களுக்குள் போட்டாபோட்டி ஏற்பட்டு அதனால் கொலைகளும் நிகழுகின்றன.

உப்புக் காய்ச்சுதல், மீன்பிடித்தல், கைவேலைப் பொருள்களைச் செய்தல் ஆகிய மூன்றுமே இந்நாட்டின் தொன்மையான தொழில்கள். இந்நிலையை மாற்றுவதற்கு இத்தாலிய ஆட்சி ஒன்றும் செய்யவில்லை, அவர்கள் காலத்தில் ஈச்சமரங்களும் நீலகிரித்தைல மரங்களும் வைத்து உண்டாக்கப்பட்டன.

ஒவ்வொரு நாட்டுக்கும் மரவகையில் சிலசிறப்புக்கள் உள்ளன. சந்தன மரம் தென்னிந்தியாவில் மட்டும் இருக்கிறது. உலகில் வேறெங்கும் சந்தனமரம் கிடையாது. தாய்லந்தில் லாம்யாய் என்னும் பழ மரம் செழித்து வருகிறது. மலேசிய நாட்டுக்கும் இவ்வாறு சில மரங்களும் பழங்களும் தனிப் பெருமை தருவதை,

தேன்பாயும் ரம்புத்தான் தித்திக்கும் மங்குஸ்தீன்
வான்தோய் டொரியான் வள மரங்கள்—மீன்பாயப்
பொங்கும் அலைகடல்கள் போர் வேழம் போல் மலைகள்
எங்கள் மலாயா இது!

என்று மலேசியக் கவிஞர் உலகநாதன் பாடுகிறார்.

இவ்வாறு லிபியாவுக்கும் அண்டை நாடுகளுக்கும் பெருமை தருவது பேரீச்சம் பழம் தரும் மரவகை. ஒவ்வொரு நாட்டிலும், மக்கள் அந்தநாட்டு மரங்களின் கிழங்கு, வேர், பட்டை, தோல், பிசின், தளிர், இலை, காம்பு, ஈர்க்கு, மொட்டு, பூ, காய், கனி, கொட்டை, பயறு முதலிய ஒவ்வொரு பகுதியையும் பயன்படுத்துகின்றனர். இயற்கைப்பொருள் ஒன்றும் வீணாவதில்லை. உரத்துக்கேனும் உதவும் என்பது வேளாண்மைத் துறையில் யான் பெற்ற அனுபவம்.

ஈச்சமரம் வைத்திருப்பது இந்த நாட்டில் ஒரு செல்வமாகக் கருதப்படுகிறது. அதிலிருந்து பேரீச்சம் பழம் கிடைக்கிறது ஈச்சமரத்து இலை, வேலிவைக்கவும்

பாய் மிடையவும் பயன்படுகிறது. ஈச்சமரத்துப் பலகை கதவுசெய்ய ஏற்றது. ஈச்சமரத்து வேர். மாட்டுத் தீவனமாக உதவுகிறது.

பாலைவனப் பகுதியில் ஜலோ என்ற நீருற்று ஒட்டகத்தில் செல்பவர்கள் தங்குவதற்கு ஏற்றதாக இருக்கிறது. இதிலிருந்து பாசனக் கால்வாய் வெட்டி தக்காளியும் கக்கரிப்பழமும் பயிரிடுகிறார்கள்.

இப்பகுதிகளில் கிணறுதான் மக்களின் உயிர்நாடி. கிணற்றின் அகலம் இரண்டு அடிதான் இருக்கும். இதை வெட்டுவதற்கு அவர்கள் படும்பாடு அல்லாவுக்கு மட்டுமே தெரியும். வெட்டிக் கொண்டிருக்கும் போதே மண் சரிந்து உள்ளே விழும். அதற்காக வைகைக்கரையில் திருப்பூவணம் பகுதியில் ஆற்றல் மிக்க சிலர்செய்வதுபோல, லிபியாவிலும் நாற்புறமும் கனமான மரங்களை ஊன்றிக் கொண்டு அவற்றைச் சதுரமாக இணைத்துப் பலகைகள் போட்டுக் கொண்டு வெட்டு வேலை தொடங்குவர். இதிலுள்ள துயரமும் துன்பமும் பொருள் நட்டமும் கவலையும் இந்நூலாசிரியரைப் போல கிணறு வெட்டித் தோல்வியடைந்து பெரும் பொருள் இழந்தவர்களால் மட்டுமே உணர முடியும். இவ்வளவுக்கும் பிறகு உப்புத் தண்ணீர் தான் கிடைக்கும். பாலைவனத்தில் வாழ்பவர்களுக்கு அது கொக்கோ கோலா! அதுதான் அவர்கள் கண்ட இளநீர்! அவர்கள் குடிக்கும் ஐஸ்கிரீமும் அதுவே!

இத்தாலியர் தங்கள் நாட்டிலிருந்து 1,12,000 உழவர்களைச் சைரனேசியாவுக்கு அனுப்பி அங்கு அவர்களுக்கு நிலம் வழங்கிப் பாசனவசதி செய்து கொடுத்து நேருக்கு நேரான சாலைகளில் சதுர வடிவான கல் கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்துக் குடியேற்றினார்கள். 1820 பண்ணைகள் அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டன,

இத்தாலிய ஆட்சி முடிவடைந்த பிறகு இவர்களில் 70,000 பேர் இத்தாலிக்குத் திரும்பி விட்டனர். இப் பகுதியில் ஆலிவ் மரங்களும் பழத்தோட்டங்களும் இத்தாலிய ஆட்சியில் ஏற்பட்ட வளர்ச்சியின் அறிகுறியாக உள்ளன. நாடோடியாகத் திரியும் மக்கள் தங்களுடைய தேவையில்லாத கால்நடைகளை ஒழித்து விடவும் அவர்களை இந்த இடங்களில் குடியேற்றவும் அரசாங்கம் முயன்று வருகிறது.

**போக்குவரத்து**

*1960* இல் பொட்டாசியம், மக்னீசியம் ஆகிய கனிப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. கோதுமை, இறைச்சி, பழங்கள் ஆகியவற்றைக் கூட இறக்குமதி செய்து கொள்ளலாம் என்ற மனப்பான்மை நிலவுகிறது. மாட்டுத் தீவனம் தக்காளி வெங்காயம் பார்லி ஆகியவையே விளைப்பொருள்கள்.

லிபியாவின் தொன்மையான போக்குவரத்து வாகனம் ஒட்டகம். இதை மாற்றுவதற்கு எத்தனை தலைமுறைகள் ஆகும் என்பது தெரியவில்லை. இத்தாலியர் ஆட்சியின்போது 242 மைலுக்கு இரயில் பாதையும் எட்டுக்கோடி ரூபாய்ச் செலவில் திரிப்போலியிருந்து பெங்காசிக்கு 640 மைல் தொலைவுக்கும் அதற்கப்பால் எகிப்திய எல்லை வரைக்கும் இராணுவத்தின் தேவைக்காக முன்னெச்சரிக்கையாக சாலை போடப்பட்டது. இந்தச் சாலை மிகுதியான அகலமும் வசதியும் உடையது. இத்தாலியர் பல இடங்களில் ஏற்படுத்திய ஆகாய விமான நிலையங்கள் அமெரிக்கரால் பேணப்பட்டு விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

**முடிவுரை**

இராணுவ முக்கியத்துவம் உள்ள இடத்தில் அமைந்துள்ள லிபியாவின் ஆதரவு அமெரிக்காவுக்கும், சூயஸ்

கால்வாயை இழந்துவிட்ட இங்கிலாந்துக்கும் இன்றியமையாததாக இருக்கிறது. ஐக்கிய நாடுகள் அவையும் அமெரிக்காவும் கோடிக்கணக்கான பணத்தைச் செலவிட்டு லிபியா கல்வித்துறை, உடல் நலத்துறை, தொழில்துறை ஆகியவற்றில் முன்னேற உதவி செய்து வருகின்றன. பெங்காசியில் எண்ணெய்ச் செல்வம் மிகுதியாக இருப்பதாக நிபுணர்கள் கூறியுள்ளனர். அதைத் தோண்ட 1958 முதல் 50 பெரிய கம்பெனிகள் முயன்று வருகின்றன. அம்முயற்சி வெற்றி பெற்றிருப்பதால் சாடி அராபியாவைவிட லிபியா எண்ணெய்ச் செல்வம் மிகுந்திருக்கிறது.

1951ல் சுதந்திரம் பெற்று ஏழை நாடாயிருந்த லிபியா இராணுவ தளங்களை அமெரிக்காவும் பிரிட்டனும் பகிர்ந்து கொள்ள இசைந்து ஒரு கோடி பவுன் கடன் வாங்கி, வரவு செலவுத் திட்டத்தைச் சரிக்கட்டிற்று.

அதன் பிறகு எண்ணெய்க் கிணறுகளால் எண்ணெய் வளத்தால் லிபியா திடீர்ப் பணக்கார நாடாயிற்று. 1968ல் எண்ணெய் பெட்ரோல் ஏற்றுமதி மூலம் லிபியாவுக்கு வருவாய் 18 கோடி பவுன். லிபியா திடீர்ப்பணக்கார நாடாகிவிட்டது. பாலைவனம் சோலைவனமாகிறது. பல்லாயிரக்கணக்கில் வீடுகளும் பள்ளிக் கூடங்களும் ஹோட்டல்களும் கட்டப்படுகின்றன. இத்தகைய பொருளாதார வளர்ச்சியில் பங்கு கொள்வதற்கு, பாகிஸ்தான் முதல் எகிப்து வரை எத்தனையோ நாடுகள் முனைந்துள்ளன. தங்கள் நாட்டிலிருந்து ஆசிரியர்கள் பொறியர்கள் மருத்துவர்கள் ஆகியோரை அனுப்பியுள்ளனர். இவற்றையெல்லாம் செய்ய இந்தியா தவறி விட்டது.

# மாரிட்டேனியா

மாரிட்டேனியா ஒரு சிறு நாடு. இது ஆப்பிரிக்காவின் வடமேற்குப் பகுதியில் இருக்கிறது. ஸ்பானிஷ் ஆட்சியிலிருந்த சஹாராவுக்கும் மொராக்கோ நாட்டுக்கும் தெற்கே இந்த நாடு உள்ளது. இந்த நாட்டிற்கு மேற்கே அட்லாண்டிக் கடலும் தெற்கே செனகல் நாடும் உள்ளன. கிழக்கே மாலியும் வடகிழக்கே அல்ஜீரியாவும் உள்ளன.

பரப்பளவில் இது ஒரு பெரிய நாடு. நான்கு லட்சத்து பதினெட்டாயிரம் சதுரமைல் கொண்டது இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு, இதில் பெரும்பகுதி பாலைவனம்.

பெயர்: மாரிட்டேனியா என்பது பழமையான பெயர். ரோமாபுரிப் பேரரசின் காலத்திலேயே இந்தப் பெயர் இருந்தது.

மூர் இனத்தவர் வாழும் நாடு என்ற பெயரில் மாரிட்டேனியா எனப்பட்டது.

மூர் இனத்தவருக்கு முன்னேயே இங்கே வாழ்ந்த நீக்ரோக்கள் பிற்காலத்தில் படையெடுத்த முஸ்லிம்களால் விரட்டியடிக்கப்பட்டனர்.

**வரலாறு**

சில நாடோடி இனங்களை அணைத்துக்கொண்டு பிரெஞ்சுக்காரர் 1904-இல் மாரிட்டேனியாவைப் பிடித்துக்கொண்டனர். 1960-இல் இது ஒரு சுதந்திர இஸ்லாமியக் குடியரசாயிற்று.

சுதந்திரம் பெற்ற போதிலும் உண்மையான அதிகாரம் பிரெஞ்சுக்காரரிடமே ஓரளவு இருந்து வருகிறது.

உள்நாட்டில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. வட பகுதியிலுள்ள மூர்களையும் தென் பகுதியிலுள்ள மூர்களையும் சேர்த்து வாழ வைப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன.

அரசியலில் இந்த நாடு ஆப்பிரிக்க நாட்டுப் பூசல்களில் சிக்கவைக்கப்படுகிறது. மாரிட்டேனியாவில் இரும்புத் தாதும் பிற பொருள்களும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. அதனால் இந்த நாட்டைப் பிடித்துக்கொள்ள மொராக்கோ அரசு ஆவலாய் இருக்கிறது.

**பல்சுவை:**

இந்நாட்டின் மக்கள் தொகை 12 லட்சம். தலைநகர் 8,000 மக்களுடைய நவாக்சோட். நவாக்சோட் என்றால் காற்றடிக்குமிடம் என்று பொருள். ஒரே துறைமுகம் எட்டியன்னே.

கடற்கரையின் நீளம் 375 மைல். விளைபொருள்கள் மணிலாக்கடலை, பேரீச்சம்பழம், மீன்.

**இருப்பது:** இந்த நாட்டில் ஒரே ஒரு நெடுஞ்சாலை.

**இல்லாதது:** தண்ணீர். செனகல் ஆற்று ஓரத்தில் மட்டுமே வேளாண்மை நடைபெறுகிறது.

**மக்கள் நெருக்கம்:** சதுர மைலுக்கு 1,000 பேர் வாழு கின்றனர்.

**ஏற்றுமதிகள்:** உப்பு, ஒட்டகம், குதிரை.

**மொழிகள்:** அரபு மொழிதான் இங்கும் பேசப்படு கிறது. பிரெஞ்சு ஆட்சி நடைபெற்ற காரணத்தால் தலைநகரத்தில் பிரெஞ்சு மொழியும் வழங்கப்பட்டது.

**வாணிகம்:** மாரிட்டேனியாவின் பெரிய வியாபாரி கள் எட்டு வணிகரே. பத்து லட்சம் செம்மறி ஆடு ஐந்து லட்சம் வெள்ளாடு என்று விற்கக்கூடிய வணிகர் கள் இருக்கிறார்கள்.

**புவியியல் வளம்:** இரும்புத்தாதில் 100-க்கு 70 பங்கு இரும்புச்சத்து இருக்கிறது. இதை வெட்டியெடுக்க இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி ஆகிய நான்கு நாடுகளும் பங்கு சேர்ந்துள்ளன. இரும்புத் தாதைத் துறைமுகத்திற்குக் கொண்டுபோக 491 மைலுக்கு இரயில்பாதை போடப்பட்டிருக்கிறது.

செப்புச் சுரங்கங்களை ஒரு பிரெஞ்சுக் கம்பெனி நடத்தி வருகிறது,

பெட்ரோல் இருக்கிறதா என்று தோண்டிப் பார்க்கும் படலமும் தொடங்கியிருக்கிறது.

*　　　　*

* ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்ற வாசகத்தைத் தமிழகத்துக்குத் தந்தவர் கணியன் பூங்குன்றனர்.
* வள்ளல்களுக்கெல்லாம் வழிகாட்டிய பெருமை பெற்றவன் பாரி வள்ளல்.
* இத்தகைய அறிஞரும் வள்ளலும், வாழ்ந்த நாட்டில் புலமையும் வண்மையும் வளர்ந்து வரும் தன்மையை

# ''செட்டிநாடும் தமிழும்''

**என்ற நூல் விளக்குகிறது.**

செட்டி நாட்டிள்ள இயற்றமிழின் சிறப்பும் இசைத் தமிழின் ஏற்றமும் இந்நூலில் இனிது இயம்பப்பட்டுள்ளன. மக்களை ஈன்ற மாதர் பாடும் இன்பத் தாலாட்டும், கண்ணீரிலே கலந்து வருகின்ற ஒப்பாரிக் கவிதையும் படித்து இன்புறத் தக்கனவாகும். செட்டிநாட்டில் வழங்கும் தமிழ்ச் சொற்களும் பிற குறிப்புக்களும் தமிழ் ஆராய்ச் சிக்குப் பயன்படுவனவாகும்.

''செட்டிநாட்டின் வரலாற்றை, தமிழோடு இணைந்த அதன் வரலாற்றை, சங்ககாலம் முதல் இக்காலம் வரை, இந்தப் புத்தகத்தில் எடுத்துச் சொல்லியுள்ளார் திரு. ''சோமலெ.'' செட்டி நாட்டின் தமிழ் ஆர்வத்துக்கு ஓர் உதாரணமாய் விளங்கும் ஆசிரியர், செட்டிநாடு தமிழுக்கு ஆற்றி யுள்ள பணிகளையும், தனிப்பண்புடன தமிழை வளர்த்துள்ள விதங்களையும், அழகான தமிழ் நடையில், இதிலே எழுதி இருக்கிருர்.

''சுடர்'', புதுடில்லி.

'செட்டிநாடும் தமிழும்' என்ற நூல் தமிழிலே ஒரு மைல் கல்.'

''ஈழகேசரி'', யாழ்ப்பாணம்.

'செட்டிநாடும் என்ற பலகணி மூலம் இந்நூல் தமிழ்நாடு முழுவதையுமே நமக்குக் காட்டுகிறது.'

''உமா''